மேழிச்செல்வம்



மாத இதழ்

சோபகிருதுஸ்ரீ

மார்கழிமீ

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1963-64-ம்ஸ்ரீ டிசம்பர் ஜனவரிமீ

MADRAS RECORD OFFICE
24 JAN 1964
MADRAS

காந்தி கிராம விவசாய பொருட்காட்சியில் பிரதமர் நேரு



12—12—63 அன்று நடந்த காய்கறி உற்பத்தி கருத்தரங்கில் தலைமை வகித்த முதல் அமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்கள் உரையாற்றுகிறார்.

பயிர் பாதுகாப்பு இயக்கத்தைப்பற்றி சர்ச் பார்க் கான்வெண்ட், ஆந்திர மகிள சபா மாணவிகள் நடத்திக்காட்டிய நடனக் காட்சி.



காய்கறிப் பயிர்களில் பயிர்பாதுகாப்பு இயக்கத்தை துவக்கிவைத்து உள்துறை விவசாய அமைச்சர் திரு பி. கக்கன் பேசுகிறார். விவசாயத் துறை நெறியாளர் (வலதுபுறம் முதல் இருப்பவர்) டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கருத்தரங்கில் முடிவுரை கூறினார்.

P 851 -

உள்ளுறை

	பக்கம்
வீட்டிற்கு ஒரு காய்கறித் தோட்டம்	5
விவசாயத்தில் விஞ்ஞானம்	8
ஒரு புதிய ரக சாம்பல் பூசணி	10
பிராந்திய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுரை	12
மாமரத்தின் மகசூலும் பயிர்ப் பாதுகாப்பும்	14
கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பூச்சி, பூசண மருந்து விலையில் விற்பனை சலுகை.	16
விவசாயச் செய்திக் கதிர்	18
1963-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திய காலநிலை அறிக்கை	21
மேழிச்செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்	22
வெற்றிப் பாதை (நாடகம்)	24
ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்..	28
உருளைக் கிழங்கு பயிரிடுவோருக்கு ஓர் எச்சரிக்கை	30

விளம்பரங்கள் :

பொட்டாஷ்	4
டாடா பைஸன் அண்ட் ராலீஸ்	7
கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ், ...	11
மெட்ரிக் யூனிட்டுகளில் வாங்குங்கள்..	13
ரங்கசாமி அண்டு கோ.	15, 20
ராஜா பண்ணைத் தோட்டம்	19
ஜான்ஸ்டன் (வெர்டிகல் பம்புகள்)	23
வாட்டர் டிவைனர்	27
ராலீஸ் இந்தியா	30

உங்கள் நெற்பயிருக்கு

பொட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa

மலர் 20 | சோபகிருதுஸ்ரீ மார்கழிமீ — 1963-64 — டிசம்பர்-ஜனவரி | இதழ் 12

வீட்டிற்கு ஒரு காய்கறித் தோட்டம்

முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தின் வேண்டுகோள்

(விவசாய செய்தி நிலையம், சென்னை-2.)

நகர மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் வசதியுள்ள இடங்களில் ஒரு வீட்டுக்காய்கறித் தோட்டம் அமைக்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் தேதி அன்று சென்னை இளம் கிறிஸ்துவ மாதர் சங்கம் ஏற்பாடு செய்த காய்கறி உற்பத்தி கருத்தரங்கில் தலைமை வகித்து பேசுகையில் நகர மக்களைக் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் சொன்னார் " பூங்கா நகர் " என்றழைக்கப்படும் சென்னை மாநகர் தன் காய்கறித் தேவைக்கு மற்ற இடங்களை எதிர்பார்க்ககூடாது. இந்நகர தேவையை நகரத்திலே நாமே உற்பத்தி செய்யவேண்டும். சென்னை நகரில் அரிசி விளைவிக்க முடியாவிட்டாலும் காய்கறி உற்பத்தி செய்ய நிறைய வாய்ப்பிருக்கிறது. இப்பணியில் பெரிதும் ஊக்கம் செலுத்தும் இளம் கிறிஸ்துவ மாதர் சங்கத்தை நான் பாராட்டுகிறேன். இப்பொறுப்பை பெண்களே எடுத்துக் கொண்டிருக்கும்போது அதைச் செவ்வனே அவர்கள் செய்து முடிப்பார்கள் என்பது நிச்சயம் என்றும் கூறினார்.

காய்கறிப் பயிர்களில் " பயிர்ப்பாதுகாப்பு இயக்கத்தை " துவக்கி வைத்த தமிழ்நாடு உள்துறை, விவசாய அமைச்சர் திரு. பி. கக்கன் விவசாயத்துறை விதை, பூச்சி மருந்துகள் உரம் போன்றவைகளை சலுகை விலையில் விற்பனை செய்கிறது. இதை நகர மக்கள் முழுதும் பயன்படுத்தி, வசதியுள்ள இடங்களிலெல்லாம் காய்கறித் தோட்டங்கள் ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இளம் கிறிஸ்துவ மாதர் சங்கம், இதுபோன்ற இதர ஸ்தாபனங்கள் இவ்வுற்பத்தி வேலையில் ஈடுபட்டிருப்பதைக் குறித்து தம் மகிழ்ச்சி தெரிவித்து இதற்கான தனது முழு ஒத்துழைப்பையும் தருவதாகக் கூறினார். இப் பயிர்ப்பாதுகாப்பு இயக்கம் 13-ம் தேதியிலிருந்து நகர பூச்சி மருந்து விற்பனை ஸ்தாபனங்களால் தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

" காய்கறி விதைப்பண்ணையை " ஆரம்பித்து வைத்த சென்னை மாநகர மேயர் திரு. ஆர். சிவசங்கர மேதா காய்கறிகளில் உயிர்ச்சத்து நிறைந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, வசதியுள்ளவர்கள் இதில் அக்கறை செலுத்தி காய்கறி உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

டாக்டர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி B.Sc. (Ag.), M.Sc. (Calif.), Ph.D. (Mich. St.) அடுத்து பேசுகையில் இளம் கிறிஸ்துவ மாதர் சங்கம் போன்ற பொதுநல ஸ்தாபனங்கள் நகரங்களில் அநேக " மாதிரி வீட்டுக்காய்கறித் தோட்டங்களை " ஏற்படுத்திக் காட்ட வேண்டுமென்றும், இதற்காக இளம் கிறிஸ்துவ மாதர் சங்கம் ஒரு சில அங்கத்தினர்களை கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிப் பண்ணையில் உள்ள

5 சென்ட் மாதிரி வீட்டுக்காய்கறித் தோட்டத்தை அவசியம் போய் பார்த்து வருதல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இம்மகத்தான பணியில் ஆர்வம் கொண்டுள்ள இளம் கிறிஸ்துவ மாதர் சங்கத்தைப் பாராட்டி தன்னாலான உதவியையும் ஒத்துழைப்பையும் தருவதாகக் கூறினார்.

முன்னர் திருமதி. பி. ஏ. சந்திரன், தலைவர், சென்னை இளம் கிறிஸ்துவ மாதர் சங்கம், முதலமைச்சர், உள்துறை விவசாய அமைச்சர், விவசாயத்துறை நெறியாளர், வருவாய்த்துறை சிறப்பு செயலாளர் திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., மற்றும் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார். இச்சங்கம் அகில இந்திய இயற்கை காய்கறிகள் பொருட்காட்சியொன்றை அடுத்த ஆண்டு ஏற்பாடு செய்ய திட்டமிட்டிருக்கிறது என்றும் கூறினார். திருமதி தர்மராஜ், சங்கத் துணைத்தலைவர், தமிழ்நாடு கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி, மைசூர் முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பா, மத்திய உணவு அமைச்சரவை சிறப்பு செயலாளர் திரு. ஏ. டி. பண்டிட் அவர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை வாசித்தளித்தார்.

காய்கறி உற்பத்தி கருத்தரங்கை துவக்கி வைத்த திரு. வி. கார்த்திகேயன் காய்கறிகளின் விதைத் தேவையை ஒரு பயிரிடும் காலத்திற்கு முன்பே, உணர்ந்து உற்பத்தி செய்து, தகுந்த காலத்தில் கிடைக்க வசதி செய்யவேண்டும் என்று கூறினார். பின்னர் கருத்தரங்கில் பங்குகொண்ட சற்றேறக் குறைய 300 பேரும் ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தோட்ட வேலையாட்கள், விதை, உரம், எரு, பயிர்ப்பாதுகாப்பு, வேலிகள், நீர்ப்பாசனம், பிரசாரம் போன்ற பிரச்னைகள் ஆராய்ந்து கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினர்.

1. வேண்டிய காலங்களில் காய்கறித் தோட்டச் சொந்தக்காரர்களுக்கு தோட்ட வேலையாட்கள் கிடைக்கச் செய்ய ஒரு சேவா கூட்டுறவு சங்கம் ஏற்படுத்துதல்.

2. சிறந்த காய்கறிகளை அரசாங்கப் பண்ணைகளில் உற்பத்தி செய்து விநியோகித்தல்.

3. சலிக்கப்பட்ட கம்போஸ்டை சென்னை மாநகராட்சி சிறு அளவில் வீடுகளிலேயே விநியோகம் செய்தல், செயற்கை உரப் பொட்டலங்களை விவசாயத்துறை விநியோகம் செய்தல்.

4. ஆபத்து இல்லாத பூச்சிபூசண மருந்துகள் உபயோகித்தல்.

5. கூவம், அடையாறு ஆறுகளிலிருந்து வடிகட்டாத நீரை வீட்டுத் தோட்டங்களுக்கு கிடைக்க வசதி செய்தல்.

6. தண்ணீர் குழாய்கள், பூவாளிகள், தோட்ட வேலைக்கான பொருட்கள் சலுகை விலையில் கொடுத்து உதவுதல்.

7. நகரத்தில் காய்கறி உற்பத்தியை ஊக்குவிக்க சினிமா படக்காட்சி சாதனங்கள், துண்டுப் பிரசுரங்கள், விசேஷ வெளியீடுகள், ரேடியோ ஒலிப்பரப்பு மூலம் பிரசாரம் செய்ய ஆவன செய்தல்.

கருத்தரங்கில் " பயிர்ப்பாதுகாப்பு இயக்கத்தை " துவக்கி வைக்கும் வகையில் பர்மாஷெல் கம்பெனியாளர் தயாரித்து சர்ச்பார்க் கான்வென்ட், ஆந்திர மகிளசபா மாணவிகளால் நடித்துக் காட்டப்பட்ட காட்சி வந்திருந்தோரின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இது தவிர ஆந்திர மகிள சபா மாணவிகள் விவசாய சம்பந்தமான நடனங்களும் நிகழ்த்தினர்.

திருமதி ஏ. அந்தோணி நன்றிகூற தேசீய கீதத்துடன் விழா முடிவடைந்தது.

விழாவிற்குப் பின் பர்மாஷெல் கம்பெனியாளரின் படக்காட்சியும் இருந்தது.

அட்டைப் படம்

காந்தி கிராமத்தில் 28—11—63 முதல் நடைபெற்ற பொருட்காட்சியில் வாழைப்பழ உற்பத்தியை அதிகப்படுத்தி, ஏற்றுமதியைப் பெருக்க கூறும் வகையில் வைக்கப்பட்ட காட்சியை பிரதமர் ஜவஹர்லால் நேரு பார்வையிடுகிறார். தமிழ்நாடு விவசாயச் செய்தி அலுவலர் திரு எம். ஜே. டேவிட் விளக்கிக் கூறுகிறார். தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு எம். பக்தவத்சலம், உள்துறை, விவசாய அமைச்சர் திரு பி. கக்கன் அவர்களையும் படத்தில் காணலாம்.

“சேவையை மதிப்பிட ஒரு சொல்”

என்றார் டாடா.

“ தூய ... சீரான ... உடனடியான ” பைஸன்
பிரேரேபித்தார்.
டாடா உதட்டைப் பிதுக்கினார்.
“ அமைதியான ... தனிப்பட்ட ... பத்திரமான ”
என்று ராலி கூறினார்.
“ ஆங்! அகப்பட்டது!” என்று கூவினார் டாடா,
கண்களில் உற்சாகம் பொங்க.
“ ஒருங்கிணைந்த சேவை!”
பைஸனும், ராலியும் ஒப்புக்கொண்டார்கள்.
சரியான சொற்களைத் தேடிப் பிடிப்பதில் டாடா கெட்டிக்காரர்.
மூவரும் ஒருமிக்கக் கூறினர். “ விவசாயிக்கு நாங்கள்
அளிப்பது ஒருங்கிணைந்த சேவை. உரங்கள், பூச்சி
மருந்துகள் வரிசையில் இந்தியாவிலேயே சிறந்தவற்றை
வழங்குவதுடன், அவற்றை உபயோகிப்பதற்கான
ஆலோசனைகளும் கூறுகிறோம்.”
“ விரிவான சேவை ” என்றார் ராலி.
“முழுமையான சேவை ” என்றார் பைஸன்.
“ ஒருங்கிணைந்த சேவை ” என்றார் டாடா.

டாடா - பைஸனும் ராலீஸும் தனித்தியங்கி வந்த தங்கள் விற்பனை நிறுவனங்களை இணைத்து ஒரே ஸ்தாபனமாக்கிவிட்டனர். இனி டாடா - பைஸன் தயாரிப்புகள் யாவற்றையும் ராலீஸின் ‘ஃபெர்டிலைஸர் அண்ட் பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன்’ விற்பனைக்குக் கொண்டுவரும். இவ்விணைப்பினால் இந்திய விவசாயிக்கு அளப்பரிய நன்மைகள் ஏற்படும். முதன்முறையாக நாடு பூராவும் பயிர் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, பயிர்ப் பாதுகாப்புக்கும் தேவையான ஆலோசனைகளும் தயாரிப்புகளும் இணைக்கப்பட்ட ஒரே ஸ்தாபனத்தின்மூலம் கிட்டப் போகிறது ... விவசாய முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க சேவை இது என்பதைக் கூறவும் வேண்டுமா?

TATA-FISON RALLIS

டாடா-பைஸன் அண்ட் ராலீஸ்

பயிர் அபிவிருத்திக்குப் பணிபுரிகின்றது!



TFRY-5 TAM

விவசாயத்தில் விஞ்ஞானம்

(எம். எஸ். ரந்தாவா, ஐ.ஸி.எஸ்.)

இந்தியாவில் விவசாயத் தொழிலை விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி நடத்தி வளர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு இன்னும் ஐம்பது ஆண்டுகள் கூட ஆகவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் அடுத்தடுத்து உணவு உற்பத்திப் பற்றாக்குறையும் பஞ்ச மும் வந்து கொண்டிருந்தது. அதனைத் தடுக்கும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் 1884-ஆம் ஆண்டில் பஞ்சத் தடுப்பு ஆலோசனைக் குழு ஒன்றினை நியமித்தார்கள். அந்தக் குழுவினர் உணவுப் பஞ்சத்தை அடியோடு தவிர்க்கவேண்டுமென்றால் திருந்திய முறை விவசாயத்தை நாடு முழுவதும் பரப்புவதுதான் ஒரே வழி என்று கண்டு சிபாரிசு செய்தார்கள். இச்சிபாரிசை நிறைவேற்றுவதற்கு முதல் நடவடிக்கையாக 1889-ஆம் ஆண்டில் பூனாவில் ஒரு கால்நடை ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. அதனை அடுத்து 1905-ஆம் ஆண்டில் பூசாவில் விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் ஏற்படுத்தப் பட்டது. இந்த நிலையத்தை உண்டாக்குவதற்கு அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவர் பெரும்பொருள் உதவினார். அதன்பின் பூனா, கான்பூர், நாகபுரி, கோயம் புத்தூர், சாபூர் முதலான பல இடங்களில் விவசாயக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. 1921-ஆம் ஆண்டில் இந்தியப் பருத்தி அபிவிருத்திக் குழு நியமிக்கப்பட்டது. அதனை அடுத்து 1929-ஆம் ஆண்டில் தற்போது இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் என்று அழைக்கப்பட்டு வரும் நிறுவனம் தோற்றுவிக்கப்பெற்றது. 1931-ஆம் ஆண்டு முதல் 1949-ஆம் ஆண்டுக்குள் சணல், கரும்பு, தேங்காய், எண்ணெய் வித்துக்கள், பாக்கு முதலான பல்வேறு உற்பத்திப் பொருள்களின் விளைவைப் பெருக்குவதற்குத் தனித் தனிச் சரக்குக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்விதம் சுமார் 50 ஆண்டுகளுக்குள் தொடங்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் இன்று நாட்டில் பல துறைகளிலும் வளர்ந்து பெருகி விவசாயிகளுக்கு எண்ணற்ற உதவிகள் புரிந்து வருகின்றன.

புதிய பயிர்கள் அறிமுகம்.—இந்தியாவில் வெளிநாடு களிலிருந்து பல பயிர்கள் அறிமுகமாகியிருக்கின்றன. அவற்றில் கம்பும் சோளமும் ஆதிகாலத்தில் ஆப்பிரிக் காவிலிருந்து இந்தியாவுக்கு அறிமுகமானவைகளாகும். திராட்சை பதினைகாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஸ்லிம் படையெடுப்பாளர்களால் ஆப்கானிஸ்தானத்தி லிருந்து இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டது. பூந் தோட்டம் அமைப்பதில் பெரு விருப்பமுடையவர்களான மொகலாய சக்கரவர்த்திகள் காலத்தில் பாப்ளார் மரங் களும், செனார் மரங்களும் மத்திய ஆசியாவிலிருந்து இந் தியாவில் அறிமுகம் ஆயின. மேற்கு நாடுகளிலிருந்து பல வகையான பயிர் வகைகளை இந்தியாவிற்கு அறிமுகம் செய்த பெருமை போர்த்துக்கீஸியர்களைச்சாரும். மிளகு, வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றை வாங்கிச் செல்வதற் காக இந்தியாவிற்குப் பதினேழாம் நூற்றாண்டில் மிகுதி யாக வந்து சென்ற அவர்கள் புகையிலை, நிலக்கடலை, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, மக்காச்சோளம், பப்பாளி, பைன்ஆப்பிள் முதலான பல பயிர்களை இந்தியாவிற்குக் கொண்டுவந்து அறிமுகம் செய்வித்தார்கள். கிழக்கு இந்தி யக்கம்பெனியாராலும் பல பயிர்கள் இந்தியாவில் அறிமுகம் ஆயின. இவ்விதம் பல காலத்திற்கு முன்பிருந்தே இந் தியாவில் வெளிநாட்டாரின் தொடர்பால் இன்னும் பற்பல பயிர்களும் அறிமுகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இவ் விதம் புதிய பயிர்களை நாட்டில் மேலும் மேலும் அறி முகப்படுத்த ஆராய்ச்சி நிலையங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

நீர்ப்பாசனம்.—இந்தியாவில் நீர்ப்பாசன முறை முதன் முதல் தென்னிந்தியாவில்தான் கையாளப்பட்டிருக்க வேண்டும். நமக்குத் தெரிந்த வரை மிகப் பழங்காலத் தில் ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாசன அணைக்கட்டு தென்னிந்தி யாவில்தான் இருக்கிறது. காவிரியாற்றின் குறுக்கே "பெரிய அணைக்கட்டு" என்ற பெயரால் கட்டப்பட்டிருக்கும் இந்த அணைக்கட்டு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அதையொட்டிய காலத்தில் தென்னிந்தியாவில் ஏராள மான நீர்ப்பாசனக் குளங்களும் ஏரிகளும் தோன்றியிருக் கின்றன. வட இந்தியாவில் வாய்க்கால் பாசன முறையைப் புகுத்தியவர்கள் முஸ்லிம் ஆட்சியாளர்களாவார்கள். மேற்கு யமுனைக் கால்வாய் பதினான்காவது நூற்றாண்டில் துக்லக் வம்சத்தாரால் கட்டப்பட்டது. 1850-ஆம் ஆண்டுக்கு முன்பு இந்தியாவில் பாசன நீர் வசதி பெற்ற நிலத்தின் பரப்பு 30 லட்சம் ஏக்கர்கள் மட்டுமே ஆகும். ஆனால் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் அவர்கள் பெரிய பெரிய நீர்ப்பாசன அணைகளைக் கட்டிச் சுமார் 5 கோடி ஏக்கர் களுக்குப் பாசன நீர் வசதி கிடைக்கும்படி செய்துவிட்டனர். இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு நீர்ப்பாசன வசதி மேலும் பல மடங்கு அதிகப்படுத்தப்பட்டது. இந்த ஆண்டுகளில் சிறிதும் பெரிதுமான 19 அணைகள் இங்குக் கட்டப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒரு கோடி ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்படி செய்யப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் இரண்டு கோடி ஏக்கர் நிலத்திற்குப் பாசன நீர் கிடைப்ப தற்குத் திட்டம் வரையறுக்கப்பட்டது. திட்டக்குழுவின் மதிப்பீட்டின்படி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் நாடு முழுவதிலும் 10 கோடி ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுவிடும். இந்தியாவின் நீர்ப்பாசன அணைகள் அனைத்தின் திறமையையும் பரிபூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளும் காலம் வரும்போது ஏறத்தாழ 17 கோடி ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. எனவே, இந்திய விவசாயத்திற்கு மூல ஆதாரமாகவும் நம்பிக்கையாகவும் இருந்து வருகின்ற நீர்ப்

பாசன வசதியைப் பெருக்குவதற்கு நாம் இன்னும் எவ்வளவு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது இதிலிருந்து தெரியவேண்டும்.

பயிர் வளர்ப்பு.—நுண் பொருள்களை அறியும் மைக்ராஸ்கோப் என்ற கருவியைக் கொண்டு பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பயிர்களின் அமைப்பு முறை ஆராயப்பட்டது. அந்த ஆராய்ச்சியின் பயனுக விலங்குகளில் ஆண் பெண் என்ற கரு உற்பத்தி "செல்"கள் இருப்பது போலவே செடி கொடிகளிலும் இரு பாலுக்கும் உரிய உற்பத்தி செல்கள் இருக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டது. இந்த உண்மை தெரிந்த பிறகு பயிர் வளர்ப்பு முறையில் ஏராளமான முன்னேற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் விஞ்ஞானிகளான பார்பர் ஹோவார்ட் முதலியோர் இந்தியாவில் கரும்பு உற்பத்தியிலும் கோதுமை உற்பத்தியிலும் புதிய முன்னேற்றங்கள் காண்பதற்கு ஆராய்ச்சிகள் பல நடத்தியிருக்கிறுர்கள். நடப்பு நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் இந்திய விஞ்ஞானிகளும் இவ்வித விவசாய ஆராய்ச்சியில் கருத்துச் செலுத்தத் தொடங்கினுர்கள். பிரபல கரும்பு நிபுணரான டி. எஸ். வெங்கட்ராமன் கரும்பு வளர்ப்பு ஆராய்ச்சியில் பல மகத்தான சாதனைகளை உண்டாக்கினுர். அவரால் தோற்றுவிக்கப்பட்ட கோயம்புத்தூர் கரும்பு வகைதான் இன்று இந்தியாவிலுள்ள சர்க்கரை ஆலைகள் அனைத்திலும் 90 சதவிகிதத்திற்கு மேல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது குஜராத், மகாராஷ்டிரம், சென்னை, ஆகிய பிரதேசங்களில் ஏராளமான திருந்திய ரகப் பருத்திகள் பயிரிடப்பட்டு வருகின்றன. சிறு தானியங்கள், நெல் ஆகியவை உற்பத்தியிலும் இப்போது திருந்திய ரகங்களைப் பல இடங்களிலும் பயிரிட்டு வருகிறுர்கள். மக்காச்சோளத்தில் இரு பிறவி ரகங்கள் இப்போது மிகவும் பிரசித்தி பெற்றிருக்கின்றன. இப்புதிய ரகங்கள் ஏற்கெனவே உள்ள நாட்டு ரகங்களைக் காட்டிலும் 30 முதல் 50 சதவிகிதம் அதிக உற்பத்தி கொடுக்கின்றன.

இரசாயன உரங்கள்.—வயலில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தழை, எரு முதலானவற்றை இடுகின்ற பழக்கம் மனித நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வருகிறது. ஆனுல் இரசாயன உரங்களின் மூலமும் வயலின் வளத்தைப் பெருக்கும் பழக்கத்தை மனிதன் மேற்கொண்டு சுமார் நூறு ஆண்டுகளே ஆகியிருக்கின்றன. முதல் உலகப்போருக்குப் பிறகு உற்பத்தியைப் பல மடங்கு பெருக்கும் தேவை அதிகரித்தது. இதனுல் உலகில் பல நாடுகளில் அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் நைட்ரேட் முதலான நைட்ரஜன் உர உப்புக்களைப் பெரிய அளவில் உற்பத்தி செய்யத் தொடங்கினுர்கள்.

இந்தியாவில் இரசாயன உரம் 1896-ஆம் ஆண்டில்தான் முதன் முதல் அறிமுகம் ஆயிற்று. 1920–30-ஆம் ஆண்டுகளில் இம்பீரியல் கெமிகல் இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலையார் இங்கு பல பரிசோதனைகளை நடத்திப் பார்த்தார்கள். 1938-ல் மைசூரிலும் 1947-ல் கேரளத்திலும் அம்மோனியம் சல்பேட் உர உற்பத்திச்சாலைகள் தோற்றுவிக்கப்பட்டன. சிந்திரி உர உற்பத்திச்சாலை 1951-லும் நங்கல் உர உற்பத்திச் சாலை 1961-லும் ஏற்பட்டன. சென்ற ஆண்டு ரூர்கேலாவிலும் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலை தோன்றியது.

இந்தியாவில் பழங் காலந்தொட்டு விவசாயமே முக்கியத் தொழிலாக இருந்து வருவதால் மண்வளம் மிகவும் நசித்துப் போயிருக்கிறது. பல இடங்களில் நைட்ரஜன் தேவை மிகுதியாகக் காணகிறது. 75 சதவிகிதம் நிலப் பரப்பில் பாஸ்பரஸ் பற்றுக்குறையாக இருக்கிறது. பொட்டாஷும் பல இடங்களில் மிகக் குறைவாக இருக்கிறது. தற்போது இந்தியாவில் உற்பத்தியாகும் இரசாயன உரங்கள் பத்தில் ஒரு பங்கு தேவைக்குக்கூடப் போதாமல் இருப்பதால் நாலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவ்வகையில் இன்னும் அதிகம் கவனம் செலுத்தவேண்டும்.

விவசாயத்தில் எந்திரங்கள்.—காலம் இன்று மாறி வருகிறது. விவசாயத்தில் நவீன எந்திரக் கருவிகளை அதிகமாகப் புகுத்துவதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடியும். சிறிய டிராக்டர் எந்திரங்களை மாடுகளுக்குப் பதிலாக உழுதல் முதலிய காரியங்களுக்குப் பயன்படுத்தலாம். இடையுழவு, விதைப்பு, உரமிடுதல், முதலான பலவற்றுக்கும் புதுப் புதுக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. மாடுகளைக் கொண்டு உழுகின்ற வயல்களில் இந்தக் கருவிகளைப் பயன்படுத்துவது அவ்வளவு சாத்தியமில்லை.

நவீன கருவிகளைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகளிடையே சிறிது நூலறிவும் திறமையும் தேவைப்படும். இதனுல் படித்து வீட்டில் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு விவசாயத் தொழிலில் ஈடுபட வாய்ப்புகள் உண்டாகலாம். பிரிட்டன், ஜப்பான் முதலான வெளி நாடுகளில் நவீன எந்திரக் கருவிகளை அதிகமாக உபயோகப்படுத்தி விவசாயத்தில் பெரு வெற்றி கண்டிருக்கிறுர்கள்.

கூட்டுறவு விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு டிராக்டர்கள் போன்ற நவீன கருவிகளை உபயோகித்தே ஆகவேண்டும். ஆதி காலத்திய விவசாய முறைகளைப் பின்பற்றிக்கொண்டு விவசாயத் தொழிலில் முன்னேற்றம் காண்பதோ பெரிய மாறுதல்களை உண்டாக்குவதோ இயலாது. இத்தொழிலில் ஜப்பானும், பிரிட்டனும் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்தற்கு முக்கிய காரணம் அந்நாடுகள் நவீன எந்திரக் கருவிகளை அதிகமாகப் பயன்படுத்தியும் விவசாயத்தில் விஞ்ஞான முறைகளை அனுசரித்தும் வந்ததேயாகும்.

இந்தியா விவசாயத் தொழிலில் முன்னேறி கிராமங்கள் செழிப்படைய வேண்டுமானுல் முதல்வதாக விஞ்ஞான முறைகளை விவசாயத்தில் கடைப்பிடிக்க நாம் சிறிதும் தயங்கக்கூடாது. டிராக்டர் முதலான நவீன கருவிகளை எங்கும் பரப்பவேண்டும். உற்பத்திப் பொருள்களை முறையாக விற்பதற்கான விற்பனைத் தலங்களை உண்டாக்க வேண்டும். எல்லா விவசாயிகளுக்கும் விஞ்ஞான ரீதியில் விவசாயம் செய்யும் முறையைக் கற்பிக்கவேண்டும்.

ஒரு புதிய ரக சாம்பல் பூசணி

(B. சிமந்தனி, K. R. ராமன்—தோட்டக்கலைப் பிரிவு, கோவை.)

கோவை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் சிறிய காய்களையுடைய புதிய ரக சாம்பல் பூசணி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வீட்டுத் தோட்டங்களுக்கு மிகவும் ஏற்றது. சாம்பல் பூசணி தமிழ்நாட்டில் மிகவும் விரும்பப்பட்ட காய்கறிகளில் ஒன்று. இது பல வகைகளில் பயன்பட்டாலும் ஒரு தடவை நறுக்கி விட்டால் 2, 3 நாட்களுக்கு மேல் வைத்திருக்க முடியவில்லை. காய்கள் மிகப் பெரியதாக (சுமார் 25-80 ராத்தல்) இருப்பதால் இவை சாதாரணமாக ஒரு குடும்பத்தின் தேவைக்கு அதிகமாகவே இருக்கின்றன.



“ சாதாரண பூசணியுடன் புதிய ரக பூசணியின் தோற்றம் ”

இப் புதிய ரக பூசணியின் ஒரு காய் ஒரு குடும்பத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நாள் தேவைக்கு ஏற்ற அளவுடையது. சராசரி $1\frac{1}{2}$ முதல் 3 ராத்தல் எடையேயுள்ளது. (மிகப்பெரிய காய்களும் 13 ராத்தலே இருந்தன.)

* சாதாரண பூசணி, விதைத்து சுமார் 5-8 மாதங்கள் வரையிலேயே பூத்துக் காய்க்கிறது. இப் புதிய ரகம் 10 மாதங்கள் வரை பூத்துக் காய்க்கிறது.

* கொடியொன்றுக்கு சுமார் 12 காய்கள் வரை கிடைக்கும். ஏக்கருக்கு சுமார் 15,000 ராத்தலுக்கு (6,700 கிலோ) மேல் மகசூல் கொடுக்கிறது.

* பழம் ஈக்களால் அதிகமாக பாதிக்கப்படுவதில்லை,

* சாதாரண பூசணியைப் போலவே நல்ல ருசியுடையது. தோல் சிறிது கனமாகவும், உள் சதை சற்று புளிப்பாகவும் இருக்கும்.

நல்ல மகசூலுக்கும் எளிதான விற்பனைக்கும் இப்புதிய ரகத்தைப் பயிரிடுங்கள்.

பயிரிடும் முறை- இப்புதிய ரகத்தை சாதாரண பூசணியைப் போன்றே பயிர் செய்யவும்.

(1) 12×12 அடி அளவில் பாத்திகள் எடுத்து ஆனி-ஆடி, தை மாதங்களில் விதைக்கவும்.

(2) ஒவ்வொன்றிலும் $2 \times 2 \times 2$ அடி அளவுள்ள நான்கு குழிகளை சம இடைவெளி விட்டுத் தோண்டவும்.

(3) விதைக்கும் பாத்திகளுக்குச் சேர்ந்தாற்போல கொடிகள் படர்ந்து வளரவும் இடம் விடவும்.

(4) ஒவ்வொரு குழியிலும் இரண்டு அல்லது மூன்று கூடை நன்றாக மக்கிய தொழு உரமோ அல்லது கம்போஸ்ட் உரமோ போட்டு குழிகளை மூடவும்.

(5) குழியொன்றுக்கு நான்கு அல்லது ஆறு விதைகள் ஊன்றவும். விதைப்பதற்கு புதிய விதைகள் சிறந்தது. மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு மேற்பட்ட விதைகள் சரிவர முளைக்க மாட்டா. விதைகள் பத்திலிருந்து பதினைந்து நாட்களில் முளைக்கும்.

(6) சாதாரணமாக, வாரத்திற்கொருமுறை தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

(7) முளைத்த பின் ஒரு மாதத்திற்குள் செடிகள் நன்றாக வளர ஆரம்பிக்கும். கொடிகளை சாதாரண பூசணியைப் போலவே தரையில் படர வைக்கலாம் அல்லது பந்தல்கள் அமைத்து அவற்றின்மீதும் வளர விடலாம். ஆனால் பந்தல்களில் வளரும் கொடிகளின் மகசூல் தரையில் படர விடும் கொடிகள் தரும் மகசூலுக்குக் குறைவாகவே இருக்கும்.

(8) கொடிகள் வளர ஆரம்பித்ததும் ஒன்று அல்லது இரண்டு முறை தேவைக்கேற்றாற்போல களைகளை நீக்க வேண்டும்.

(9) இரண்டு அல்லது இரண்டரை மாதங்களில் செடிகள் பூக்க ஆரம்பிக்கும். நான்கு மாதத்திலிருந்து

(4-ம் பக்கம் பார்க்கவும்)

இன்று, என்றையும்விட, நாட்டிற்கு அதிக உணவு தேவையாக இருக்கிறது. இது விவசாயிகளுக்கு ஒரு சவாலாகும். கிர்லோஸ்கர் டீஸல் என்ஜின்கள் இந்த சவாலுக்கு ஒரே விடையாகும்.

ஒவ்வொரு கிர்லோஸ்கர் என்ஜினும் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாகவும், சுலபமாக கையாளக்கூடியதாகவும், விற்பனைக்குப் பிறகு நேர்த்தியாக கவனிக்கப்படுகின்றதாகவும் இருக்கின்றது. இது மிக நம்பத்தகுந்ததும் கூட! கிர்லோஸ்கர் என்ஜின்களை உபயோகித்து நாட்டிற்கு அதிக உணவு உற்பத்தி செய்யுங்கள்.

கிர்லோஸ்கர்

இந்தியாவின் பயிர் நிலங்களிலிருந்து அதிக உணவிற்காக...!

டீஸல் என்ஜின்கள்

3 ஹார்ஸ் பவர் முதல் 15 ஹார்ஸ் பவர் வரை





மாதிரி AV 1 அண்டு JV 1
5 முதல் 7.5 ஹார்ஸ் பவர் வரை

மாதிரி 1 M
10 முதல் 12 ஹார்ஸ் பவர் வரை

மாதிரி AV 2 அண்டு JV 2
10 முதல் 15 ஹார்ஸ் பவர் வரை

கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்.,

எல்பின்ஸ்டன் ரோடு, புனா-3 (இந்தியா)

பிராந்திய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை

(ஆர். எச். கிருட்டிணன், டி. ஜி. சௌந்தரராஜன்)

தஞ்சை மாவட்டத்தில் ஜீவ நதியான காவிரி பாய்வதால் தண்ணீர்த் தட்டில்லாமல் சாகுபடி செய்ய வாய்ப்பும் பலவகைப்பட்ட பயிர்கள் இல்லாமல் நெல் மட்டும் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. எனவே, நெல் சாகுபடி செய்வோர்க்கு ஏற்படக்கூடிய பிரச்னைகள் மற்ற மாவட்டங்களை விட தஞ்சை மாவட்டத்திற்கே அதிகமாக ஏற்படுகின்றன.

அந்தப் பிரச்னைகளைத் தீர்க்கும் நோக்குடன், 1922-ல் ஆடுதுறையில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை ஏற்படுத்தப் பட்டது. கடந்த சுமார் நாற்பது ஆண்டுகளாகச் செய்து வந்த முயற்சியின் பயனாய், தஞ்சையிலும் அதற்கண்மையிலுள்ள மாவட்டங்களிலும் உள்ள பலவிதமான நெல் ரகங்களிலிருந்து "வர்க்கசுத்தி" (pureline selection) முறையிலும், "கருச் சேர்க்கை" (hybridisation) முறையிலுமாக 25 பொறுக்கு வித்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. சாகுபடி முறையிலும் பலவிதமான ஆராய்ச்சிகள் செய்து, பல திருந்திய முறைகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. நெற்பயிருக்கு லாபகரமானதும் அதிக பலன் தரக்கூடியதுமான உரங்களும், இடும் முறைகளும் சிபாரிசு செய்யபபட்டுள்ளன.

மிக வேகமாகப் பெருகிவரும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும், விரைவாக முன்னேறிவரும் தொழில் துறையின் மூலம் பொருள்களின் அவசியத்தை அனுசரித்தும், உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவது இன்றியமையாததொன்றாகும். இந்த லட்சியத்துடன், ஆடுதுறை விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, **பிராந்திய ஆராய்ச்சி நிலையமாக** விரிவுபடுத்தப்பட்டு, பிரச்னைகள் பலவேறு கோணங்களிலிருந்து ஆராயப்பட்டு வருகின்றன. பரிசீலனைக்குட்பட்ட பல அம்சங்களில் கீழ்க்கண்டவைகள் குறிப்பிடத்தக்கன.

1. **உரமேற்கும் திறன்.**—உலகத்திலுள்ள ஆயிரக் கணக்கான நெல் ரகங்களைப் பரிசோதனை செய்து பார்த்ததில், அவைகள் "இண்டிகா" (indica), "ஜப்பானிகா" (japonica), "ஜவானிகா" (javanica) என மூன்று வகைக்குள் அடங்குமெனத்தெரியவந்தது. இம்மூன்றினுள், நமது "இண்டிகா" ரகமானது அதிகமான உரச்சத்தை ஏற்றுக் கொள்ளும் சக்தியற்றதாக இருப்பதால், ஓரளவுக்குமேல் இரசாயன உரங்களை உபயோகிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். மாறாக, "ஜப்பானிகா" நெல் ரகங்கள் அதிக அளவில் உரமேற்கும் திறன் பெற்றுள்ளன. இந்தியாவைக் காட்டிலும் ஜப்பானில் அதிக விளைச்சல் காண இது ஒரு காரணமாகும். தட்பவெட்பநிலை, இருப்பிட அமைப்பு போன்ற பல வேறுபாடுகளினால் "ஜப்பானிய" ரகங்களை நேரடியாக நம் நாட்டில் சாகுபடி செய்ய முடியவில்லை. இதனால் நமது "இண்டிகா" ரகங்களையும் "ஜப்பானிகா" ரகங்களையும் "கருச் சேர்க்கை" முறையில் இணைத்து, புது நெல் ரகங்களை உண்டாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இம் முயற்சியின் பலனாக அதிகமான இரசாயன உரங்களை ஏற்றுக்கொண்டு அதிக மகசூலைக் கொடுக்கக்கூடிய பொறுக்கு விதையொன்று வெளிவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

2. **பயிர் சாய்தல்.**—இயற்கையிலேயே வலுவில்லாத தண்டுள்ளமையாலும், பருவகால சீதோஷ்ண சூழ்நிலைகளினாலும், சரியான சாகுபடி முறைகளைப் பின்பற்ற முடியாத காரணத்தாலும் நம் நாட்டில் பயிராகிவரும் பெரும்பாலான நெல் வகைகள் முழுவதும் விளைவதற்கு முன்னதாகவே சாய்ந்து விடுகின்றன. இவ்வாறு சாய்ந்து விடுவதால், முற்றும் விளையாத நிலையில் இருக்கும் நெல்மணிகள் விளைவதற்கு ஏதுவில்லாமலும் முற்றிலும் விளைந்த மணிகள் பயிரிலேயே முளைத்துவிடுவதற்கு ஏதுவாகவும் இருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பெருமளவில் நஷ்டம் ஏற்படுகிறது. இதுபோன்ற சேதம் மழைக்காலத்தில் அறுவடைக்கு வரக்கூடிய குறுவைப் பயிரை அதிகம் பாதிக்கிறது. என்னென்ன முறைகளில் இதைத் தடுக்கமுடியும் என ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. பலம் பொருந்திய தண்டு உள்ள, உயரம் குறைந்த "ஜப்பானிகா" ரகங்களுடன் நமது ரகங்களைச் சேர்த்து, பயிர் சாயாத தன்மையை நமது ரகத்தில் உண்டாக்கும் முயற்சியில் நல்ல வெற்றி கிட்டியிருக்கிறது.

3. **கதிரிலேயே முளைத்தல்.**—தற்பொழுது பெரிதும் விளைவிக்கப்படும் பெரும்பாலான ரகங்கள், மணிகள் முற்றியவுடனேயே முளைத்து விடுகின்றன. சில ரகங்கள் மட்டும் அறுவடையான பின்னும் 3 அல்லது 4 மாதங்கள் வரை முளைப்பதில்லை. இந்த முளைக்காத நிலையை விதை "உரக்க நிலை" (dormancy) என்று கூறுகிறோம். பொதுவாக குறுவைப் பட்டத்தில் சாகுபடி செய்யப்படும் எல்லா ரகங்களுமே அறுவடைக்காலத்தில் மழை பெய்துவிட்டால் கதிரிலேயே நெல் முளைத்து விடுகின்றன. இக் குறையைப் போக்க இயற்கையிலேயே "உரங்கும் தன்மை" கொண்ட ரகங்களுடன் நமது குறுவை ரகங்களை ஒட்டுச் சேர்த்து உரிய பயனை அடையும் முயற்சியில் ஓரளவு வெற்றி கண்டிருக்கிறோம்.

4. **நெல் உதிர்தல்.**—உரிய காலத்தில் அறுவடை செய்தபோதிலும், சில நெல் ரகங்கள் அறுவடை செய்து கட்டுகட்டி, களத்துமேட்டுக்கு எடுத்து வருவதற்குள்ளாக ஏராளமான மணிகள் உதிர்வதைக் கண்டிருக்கிறோம். இவ்வாறு உதிர்தலானது ரகத்துக்கு ரகம் வேறுபடுவதும், சில ரகங்கள் களத்தில் தலை டி அடித்தபோதிலும் விழாமல் இருப்பதும் நாம் அறிந்ததே. அறுவடையின் போது உள்ள பருவ கால வேறுபாடுகளுக்கு ஏற்ப நெல்

ஒருபோழுதும்
ஒத்துப்பார்க்காதீர்கள்...

உங்கள் குழந்தைகளை அக்கம் பக்கத்துக் குழந்தைகளுடன் ஒத்துப பார்த்தால் ஏமாற றந்தான ஏற்படும். அதே மாதிரி மெட்ரிக் முறையையும். பழைய சேர். வீசை முறை யையும் ஒத்துப் பார்ப்பது வீண் வேலைதான. இதனுல் உங்கள் நேரத்தை வீணடிபபதுடன், நஷடமும் அடைவீர்கள்.

துரிதமான சேவைக்கும், நேர்மையான வாத்தகததிற்கும் பொருள்களை

மெட்ரிக் யூனிட்டுகளில் வாங்குங்கள்

உதிர்தல் கூடவோ, குறையவோ காண்கிறோம். "ஜப்பானிகா" ரகங்களிலும் சில இந்திய ரகங்களிலும் இவ்விதம் உதிர்வது அறவே இல்லை எனலாம். இதற்காக உதிரும் ரகங்களையும், உதிராதவற்றையும் இணைக்கும் முயற்சியும் நல்ல பலன் அளித்திருக்கிறது.

5. கொலை நோய்.—பெரும்பான்மையான நெல்வகைகள் இந்த நோய்க்கு (blast) இலக்காகின்றன. இதனுல் ஏற்படும் சேதம் நோயின் தீவிரததைப்பொறுத்து மாறுகிறது. இந்நோய் மிகக் கடுமையாகப் பரவிய சில வருடங்களில், பயிர் முழுவதும் கருகிப்போய், ஒரு கட்டு வைக்கோலுக்கும் வழியில்லாமல் போனதுமுண்டு. இந்நோயை எதிர்த்து நிற்கும் சக்தியை இயற்கையாகக் கொண்ட சில நெல் இனங்களும் இல்லாமலில்லை. உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தில் பெருமளவுக்கு பயிரிடப்பட்டுவரும் குரங்கு சம்பா (A D.T. 10) என்னும் நெல் இக் கொலை நோய்க்கு எளிதில் பலியாகிறது. கோயம்புத்தூரில் ஒரு பகுதியிலுள்ள ஆனைக்கொம்பன் (Co. 4) இந்த நோயை எதிர்த்து நிற்கும் திறனுள்ளது. ஆனுல் இந்தப் பிந்திய ரகத்தை நேரடியாக எல்லா இடங்களிலும் பயிரிட முடியாத காரணத்தால், அந்த நல்ல சக்தியை மற்ற முக்கிய ரகங்களிலும் உண்டாக்க வேண்டி கருச் சேர்க்கை முறை கையாளப்பட்டது. அத்தகையதொரு பணியின் பயனே தமிழகம் முழுதும் பயிரிடப்படும் கோ. 25 என்னும் ரகம். இம்முயற்சியை இன்னும் விரிவாக்கி இதன் அரிசியின் தரத்தை உயர்த்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவைகளைத் தவிர, சீர்காழி, மாயவரம், திருத்துறைப் பூண்டி போன்ற இடங்களில் பயிராகி வரும் மட்டைக் குருவையினின்று "வர்க்கசுத்தி" முறையைப் பின்பற்றி களர் தாங்கும் ஒரு புதிய பொறுக்குவிதை (A.D.T. 26) அண்மையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

துரித முறையில் மண்ணைப் பரிசோதனை செய்து, நிலத்தின் குறையைப் போக்கி, விளைவைப் பெருக்க உரமிடுதலில் விவசாயிகளுக்கு தகுந்த சிபாரிசு செய்யவும் மண்பரிசோதனை நிலையமொன்று பிராந்திய ஆராய்ச்சி நிலையத்துடன் இயங்கிவருகிறது.

மற்றும் நெற்பயிரைத் தாக்கும் பலவேறு பூச்சிகளைப் பற்றியும், பூஞ்சண நோய்களைப் பற்றியும் விரிவாக ஆராய்ச்சி செய்யப்படுகின்றது.

தமிழ் நாட்டில் மின்சார முன்னேற்றம்.

1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ் நாட்டில் மின்சார வசதி பெற்றிருந்த நகரங்கள், கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 15,382; மின்சார பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 1,77,606.

(தமிழ்நாடு செய்தித் துறை.)

மாமரத்தின் மகசூலும் பயிர்ப் பாதுகாப்பும்

[T. V. சுப்ரமணியன், B.Sc., A.M.I.H., N. P. K. சாகுல் ஹமீது, B.Sc., (Ag.)].

பழங்களிலே தனிப் பெருமையையுடைய மாமரம் தை மாதத்தில் பூத்துக் குலுங்குவதைக் கண்டு களிப்படைகிறார் விவசாயி. அதே டலைமல் ஆனந்தத்தால் தன் ஏனைய விவசாயிகளிடம் தனது மாந்தோப்பில் எந்த பலன் பிடிக்கிருப்பதாகக் கூறிப் பெருமைப்படுகிறார். ஆனால் அதே விவசாயி சில நாட்கள் கழித்து பூத்த பூக்கள் பலன் கொடுக்கவில்லையென்று பதறி, கமறி விட்டது என்று கையை விரிக்கிறார்! அதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு உண்டு. 1. மாமரத்தில் தோன்றும் சாம்பல் நோய் (Mildew); 2. மாமரத் தத்துப் பூச்சி (Mango Hopper). இவை இரண்டும்தான் மாமரத்தின் மகசூல் குறையக் காரணமாக இருக்கிறது.

1 சாம்பல் நோய் (Mildew) :—நம் நாட்டில் பெரும்பாலும் மாமரங்கள் கார்த்திகை மாதம் முதல் மாசி மாதம் முடிய மொக்குக் கட்டிப் பூப்பூக்கின்றன. இக்காலத்தில் நம் நாட்டில் பனி காலமாக இருக்கிறது. இதன் காரணமாக காலையிலும், மாலையிலும் வானம் மந்தாரமாக மோடம் போட்டுக்கொள்கிறது. இச் சூழ்நிலைதான் மாமரத்தில் சாம்பல் நோய் உண்டாவதற்கும், பரவுவதற்கும் மிக ஏதுவாயிருக்கும். மேலும் பனியும், மோடமாயும் இருக்கும் நாட்களில் இந்நோய் வெகு சீக்கிரம் மரத்திற்கு மரம் பரவுகிறது.

சாம்பல் நோய் தாக்கப்பட்ட பூக் கொத்துக்கள் சாம்பல் நிற வெண்மையாகத் தோற்றமளிக்கும். இந்நோய்க்குக் காரணமான பூஞ்சணம் முதலில் பூங்கொத்துக்களின் நுனிப் பாகங்களைத் தாக்கிப் பின்னர் பூங்கொத்தின் மற்ற பாகங்களையும், இளங் குருத்துக்களையும் தாக்குகிறது. இந்நோய் காற்றின் மூலம் வெகு விரைவில் தோப்பு முழுவதும் பரவிவிடும். தாக்கப்பட்ட பாகங்களில் பூஞ்சணம் அடர்ந்து வளர்ந்து பூப்பதால், அவை வெண்மையாகக் காணப்படும். இதனால் பலன் பாதிக்கப்படுகிறது.

இந்நோய் வராமலும், வந்தபின் பரவாமலும் தடுப்பதற்கு தண்ணீரில் கரையக்கூடிய கந்தகம் ஒரு ராத்தலை 30 காலன் தண்ணீரில் கரைத்து, ஸ்பிரேயர் மூலம் தெளிக்கவேண்டும். நோய் தடுப்பு முறைகளை மாமரங்கள் மொட்டுவிட ஆரம்பித்தவுடனேயே கையாளவேண்டும்.

2. தத்துப் பூச்சி (Mango Hopper) :—மாமரத் தத்துப் பூச்சி மாமரத்தில் மொட்டுத் தோன்றும் அக் குளிர் பருவத்தில் தோன்றி பூக்கும் காலங்களில் அதிக அளவில் இன அபிவிருத்தியடைந்து பூங்கொத்துக் காம்புகளின் சாற்றையும் இளங்கொழுந்துகளின் சாற்றையும் உறிஞ்சி மாமரங்கள் பலன் பிடிக்காது சேதம் உண்டு பண்ணுகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மரங்கள் நோய் வாய்ப்பட்டதுபோல் காட்சியளிக்கும். ஆண்டுதோறும் இப்பூச்சிகளினால் விடாது தாக்கப்பட்டு வந்தால், மரங்களின் வலிமை குன்றி நாளடைவில் காய்ப்புச் சக்தியும் குறைந்துவிடும்.

இக்குளிர் பருவத்துக்குமுன் இதன் தாய்ப் பூச்சிகள் மரத்தின் பட்டை இடுக்குகளில் பறக்கும் நிலையில் வாழும். இக்குளிர் பருவம் வந்தவுடன் இத் தாய்ப் பூச்சிகள் பூங்கொத்துகளிலும், இளந் தளிர்களிலும் முட்டையிடுகின்றன. இவைகளிலிருந்து ஒரு வாரம் அல்லது பத்து நாட்களில் குஞ்சுகள் பொறித்து வெளி வந்து சேதப்படுத்துகின்றன.

இப்பூச்சிகள் காணப்பட்டால் பூங்கொத்தில் உள்ள பூக்கள் மொட்டாக இருக்கும்பொழுதே தடுப்பு முறையாக டி டி டீ 50 சத மருந்தை (ஒரு ராத்தலுக்கு 30 காலன் தண்ணீர்) தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவேண்டும்.

சாம்பல் நோயும் தத்துப் பூச்சியும் மாமரம் பூவெடுக்கும் காலத்தில் தோன்றி முறையே 30 சதவீதமும் 50 சதவீத நஷ்டமும் ஏற்படுத்துகிறது. எனவே மொத்தத்தில் 80 சதவீத நஷ்டமடைகிறது.

இதனைத் தவிர்க்க மாமொட்டு விடும் பருவத்திலேயே முன் தடுப்பு முறையாக 50 சத டி. டி. டீ. ஒரு ராத்தலையும், தண்ணீரில் கரையும் கந்தகம் ஒரு ராத்தலையும் 30 காலன் தண்ணீரில் கரைத்து (அதாவது 75 படி தண்ணீரில்) தெளிக்கவேண்டும். நன்கு வளர்ந்த மாமரம் ஒன்றுக்கு சுமார் 3 முதல் 5 காலன் மருந்துக் கலவை தேவைப்படும்.

மருந்தைத் தெளிக்கும்போது மரத்தின் இலைகளிலும், பூங்கொத்துக்களிலும் மொட்டுகளிலும் நன்றாகப் படும்படி தெளிக்கவேண்டும். எத்தனை முறை மருந்தடிக்க வேண்டும் என்பது பருவத்தையும் நோயின் தாக்குதலையும் பொருத்துள்ளது. சாதாரணமாக மூன்று வாரங்களுக்கொரு முறை மருந்தடிப்பது நல்லது. ஆனால் மருந்தடித்த இரண்டொரு தினங்களில் மழை பெய்துவிட்டால் மழை நின்றபிறகு உடனே மறுமுறையும் மருந்தடிக்கவேண்டும். மொக்குகள் நன்கு மலர்ந்த பின்னர் மருந்தடிப்பது அவ்வளவு நன்மை பயப்பதில்லை.

மருந்தடிக்கும்போது கவனிக்கவேண்டிய விதிகள்

1. காற்றில்லாதபோதும், வெய்யில் வருவதற்கு முன்னும் அதிகாலையில் மருந்தடித்தல் நலம்.

2. மருந்தை மரங்களில் தெளிக்கும்போது வெடிப்புள்ள அடிமரங்கள், கிளைகள் இவைகளில் மருந்து நன்கு பட்டு நனையும்படி தெளிக்கவேண்டும். அவ்வாறு செய்வதால் அவ்விடுக்குகளில் மறைந்துகொண்டு இருக்கும் பூச்சிகளையும் கொல்ல ஏதுவாயிருக்கும்.

3. மருந்து தெளிக்கும் அதிர்ச்சியில் பூங்கொத்துக்களிலுள்ள மொக்குகளும், பூக்களும் உதிர்ந்துவிடாது கவனமாகப் பார்த்து பூங்கொத்தின் அடிப்பாகத்திலிருந்து மருந்தைத் தெளிக்கவேண்டும்.

4. கையினால் இயங்கும் ஸ்ப்ரேயரைவிட (Sprayer) விசை ஸ்ப்ரேயரை (Power Sprayer) உபயோகிப்பது நலம்.

5. இப் பயிர்ப்பாதுகாப்பு முறையை ஓராண்டு மட்டும் அடித்து நிறுத்திவிடாமல் வருடா வருடம் தொடர்ந்து காலாகாலத்தில் கையாளுவது நலம்.

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

காய்கள் அறுவடைக்கு வரும். பின்னர் தொடர்ந்து பத்து மாதங்கள் வரை காய்த்துக்கொண்டேயிருக்கும்.

(10) சிறுகாய்களைத் தாக்கும் பழ ஈக்கள் (Fruit fly) காணப்பட்டால் அதைத் தடுக்க பாலிடால் என்னும் மருந்தை பன்னிரண்டரை காலன் தண்ணீருக்கு ஒரு அவுன்சு வீதம் கலந்து கொடிகளின் மேல் அடிக்கவும். மருந்து அடிக்கப்பட்டு பதினைந்து நாட்களுக்குப் பிறகுதான் காய்களை உபயோகப்படுத்தவேண்டும்.

வீட்டுத் தோட்டங்களில் இப்புதிய ரகத்தை எளிதில் பயிரிடலாம். அவரவர் தேவைக்கு ஏற்ப சில கொடிகளை தரைமீதோ, வீட்டுக் கூரைகளிலோ, பந்தல், வேலி அல்லது மரங்களின் மீதோ படர விட்டுப் பலனடையலாம்.

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினல்' அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்

(No. C. 1206691/61—14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம்
காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)

குணங்கள்

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினல் செய்யப் பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாது காப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூஸ் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



விலை விவரம்

(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)



18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டாங்க் 290 ரூபாய்

14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டாங்க் 280 ரூபாய்

மாருத் சார்ஜ் பம்பு ... ... 280 ரூபாய்

செயலாளர்கள்

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ்
பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள்

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பூச்சி, பூசண மருந்து சலுகை விலையில் விற்பனை

(அரசாங்க ஆணை 482, உணவு—விவசாயத்துறை—தேதி 12-2-1963)

1. குறைந்த அளவு நச்சுத் தன்மையுள்ள பி. எச். சி. 10 சத வீதம், பி. எச். சி. 50 சத வீதம், டி. டி. டீ. 5 சத வீதம், டி. டி. டீ. 50 சத வீதம் போன்ற பூச்சி மருந்துகளையும், தாமிர கலவை மருந்துகள் போன்ற பூசண கொல்லி மருந்துகளையும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சலுகை விலையில் விவசாயிகளுக்கு 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் வழங்க அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது.

2. கூட்டுறவு சங்கங்கள் முழுவிலை கொடுத்து விவசாய டெப்போக்களிலிருந்து பூச்சி, பூசண மருந்துகளை முதலில் வாங்கவேண்டும். கூட்டுறவு சங்கங்கள் பிறகு சலுகை விற்பனை மூலம் மேற்கொள்ளும் நஷ்டமும், மானியமும் பின் அதற்குண்டான முறைப்படி ஈடுசெய்து கொடுக்கப்படும்.

3. **கூட்டுறவு சங்கங்களுக்கு சரக்கு மாற்றுதல்.**—பூச்சி பூசண மருந்துகள் விற்பனை செய்ய விரும்பும் கூட்டுறவு சங்கங்களுக்கும், தனியாக இருப்பு வைக்க கிடங்கு வசதியுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு பி. எச். சி. 10 சத வீதம் பி. எச். சி. 50 சத வீதம், டி. டி. டீ. 5 சத வீதம், டி. டி. டீ. 50 சத வீதம் முழு விலையில் உடனடியாக விற்கப்படும். கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கும். கூட்டுறவு சங்கங்களிடமிருந்து மருந்தின் அடக்க விலையோடு (கம்பெனி பில்லில் கண்டபடி) மாவட்ட விவசாய அலுவலர் போக்குவரத்து, இதர கூலி செலவு ஏதாவது செய்திருந்தால் அவற்றை மட்டும்தான் வசூலிக்கப்படவேண்டும்.

விவசாயக் கிடங்குகளிலிருந்து மருந்துகளை எடுத்துக் கொள்ள கூட்டுறவு சங்கங்களே அதற்கான ஏற்பாடுகளை செய்து கொள்ளவேண்டும். அதற்காக ஏற்படும் செலவுகளை கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்ளும்.

இவ்வாறு கூட்டுறவு சங்கங்களுக்கு மாற்றப்பட்ட பூச்சி பூசண மருந்துகளை அந்த கூட்டுறவு சங்கங்கள் விற்பனை செய்ய ஆரம்பிக்கும்பொழுது, அந்த பகுதியிலுள்ள விவசாய டெப்போக்கள் மேற்கூறப்பட்ட பூச்சி பூசண மருந்துகளை மட்டும் விற்பனை செய்வதை நிறுத்திக் கொள்ளும்.

4. **இருப்பு வைத்தலும் தேவை பூர்த்தி செய்தலும்.**—கூட்டுறவு சங்கங்கள் அவ் வட்டாரத்திலுள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலரைக் கலந்து ஆலோசித்து, கால் வருட பூச்சி மருந்துகளின் தேவையை நிர்ணயித்து மாவட்ட விவசாய அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அவர் அம்மருந்துகளை சம்பந்தப்பட்ட கம்பெனிகளிலிருந்து தருவித்து விவசாய கிடங்குகளில் இருப்பு வைக்க ஏற்பாடு செய்வார். கூட்டுறவு சங்கங்களிலிருந்து அவ்வப்போது மனு வரும்பொழுது பூச்சி, பூசண மருந்து வழங்கப்படும். பின்னர் மாவட்ட விவசாய அலுவலர் எப்பொழுதும் 3 மாத தேவைக்கான பூச்சி, பூசண மருந்துகள் விவசாய கிடங்குகளில் இருந்து வருமாறு பார்த்துக்கொள்வார்.

5. **விநியோக முறை.**—கூட்டுறவு சங்கங்கள் விவசாய டெப்போக்களில் முழுவிலை செலுத்தியே பூச்சி பூசண மருந்துகள் வாங்கவேண்டும். பின்னர் விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கவேண்டும். சலுகை விலையில் பூச்சி, பூசண மருந்துகளை அங்கத்தினர், அங்கத்தினரல்லாதார் என்ற பாகுபாடு ஏதுமில்லாது எல்லோருக்கும் வழங்கவேண்டும். ஏதாவது பாகுபாடு காண்பித்தால் சலுகை மான்யம் ஈடுசெய்வது நிறுத்தப்படும். கிராம சேவக் அல்லது விவசாய விஸ்தரிப்பு அலுவலர் அல்லது பயிர் பாதுகாப்பு உதவியாளர் அல்லது தனி விவசாய விளக்குனர், அல்லது பஞ்சாயத்து தலைவர் இவர்கள் கொடுக்கும் சீட்டு அல்லது அத்தாட்சியின்பேரில்தான் கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்கு சலுகை விலையில் மருந்து வழங்கவேண்டும். இந்த சீட்டுக்களை வரிசை நெம்பர் இட்டு, பத்திரமாக கோர்வையில் வைத்தல் வேண்டும். பார்வையிடும் ஆய்வாளர்களுக்குக் காண்பித்தல் வேண்டும். மருந்து பெற்றுக்கொண்டவர்களிடமிருந்து, பூச்சி மருந்து பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் கையெழுத்து விற்பனை சீட்டின் மூல பிரதி, இதர நகல்களிலும் பெற்றிருத்தல் வேண்டும். தனி நபருக்கு தற்போது கொடுக்கப்படும் சலுகை வரம்பான ஏக்கருக்கு ரூ. 5 வீதம் அதிக பட்சம் ரூ. 25-யே கூட்டுறவு சங்கங்களும் கடைப்பிடித்தல் வேண்டும்.

6. **கணக்கு வைக்கும் முறைகளும் சலுகை பெறும் முறைகளும்.**—விவசாய டெப்போவிலிருந்து எடுக்கப்பட்ட பூச்சி மருந்துகள் பயிர்களுக்கு ஏற்றாற்போல் அதற்குண்டான சலுகை விலையில் கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும். கூட்டுறவு சங்கங்களில் அதன் விற்பனை விலை விவசாய டெப்போக்களில் வாங்கும்பொழுது கொடுத்த தொகையோடு பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் உள்ள ஊரிலிருந்தால் 3 சதவீதம், அல்லது அதற்கு வெளியே இருந்தால் 6 சதவீதம் கூடுதல் தொகையும் சேர்ந்ததாயிருக்கும். கூட்டுறவு சங்கங்கள் சலுகை விலையில் மருந்து பெற்றுக்கொண்ட நபரின் பெயர், விலாசம், மருந்தின் பெயர், சலுகை விலையில் விற்ற மருந்தின் அளவு, அதன் விலை போன்ற விவரங்களுடன் கூடிய ஒரு சலுகை விலை விற்பனை பதிவேடு வைத்து வருதல் அவசியம். உணவுப் பயிர் அல்லது

கரும்பு, நிலக்கடலை, பருத்தி போன்ற பணப் பயிர்களுக்காக சலுகை விலையில் விற்ற விவரங்களை அதற்கென தனி பக்கங்களை ஒதுக்கிவைத்து கணக்கு பதிவு செய்து வருதல் வெண்டும். மாவட்ட விவசாய அலுவலர் இந்த பதிவேடு இருக்கவேண்டிய அமைப்பையும் விவரங்களையும் கூட்டுறவு சங்கங்களுக்கு அறிவிப்பார். மேலும் கூட்டுறவு சங்கங்கள் ஒரு இருப்பு அளவு பதிவேட்டையும் வைத்து வருகல் அவசியம். அதில் சரக்கு வந்த விவரம், விற்பனை செய்யப்பட்டவை, மீதி கையிருப்பு விவரங்கள் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இந்த பதிவேடுகள் மாவட்ட விவசாய அலுவலர்கள், பயிர்ப் பாதுகாப்பு அலுவலர்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய மான்ய தொகை அந்த கூட்டுறவு சங்கம் அந்த மாதத்தில் விற்ற பூச்சி மருந்துகளின் முழுத்தொகையையும் அவைகள் விவசாயிகளுக்கு அளித்த சலுகையின் மதிப்பையும் பொறுத்தும் நிர்ணயிக்கப்பட வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் மாதத்தின் முதலில் முந்திய மாதத்தில் சலுகை மூலம் விற்பனை செய்ததினுல் ஏற்பட்ட நஷ்டத்தை திரும்பிப் பெற ஒரு உரிமை விண்ணப்பத்தை முந்திய மாதத்தில் விற்பனை செய்த மருந்துகளின் விவரத்துடன், அதனுடைய விற்பனைச் சீட்டுகளின் நகல்களுடன் அனுப்பவேண்டும். இதற்காக மாவட்ட விவசாய அலுவலர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து ஒரு விவர அறிக்கை பெறுதல் வேண்டும். அவ்வறிக்கையில் விநியோகிக்கப்பட்ட மருந்துகளின் விவரங்கள், விவசாயிகளுக்கு அளித்த சலுகையின் மதிப்பு குறிப்பிடப்பட வேண்டும். இதற்குச் சான்ருக மூல விற்பனைச் சீட்டின் அடிச் சீட்டு இவ்வறிக்கையோடு சேர்த்து அனுப்பப்பட வேண்டும். இவ்வறிக்கையைப் பெற்றவுடன் மாவட்ட விவசாய அலுவலர் அதில் கொடுக்கப்பட்ட கணக்குகளைச் சரிபார்த்து அனுமதிக்கப்பட வேண்டிய சலுகை மான்யம் நிர்ணயிக்க வேண்டும். இச் சலுகைத் தொகையை இந்த அறிக்கையையே உறுதிச் சீட்டாக பாவித்து, அதிலேயே சரியான ரசீது பெற்றுக்கொண்டு பிரித்துக் கொடுக்க வேண்டும்.

7. ஒவ்வொரு மாவட்ட விவசாய அலுவலரும் அளிக்கக் கூடிய உச்சவரம்பு சலுகைத் தொகை ரூ. 10,000.—கூட்டுறவு சங்கங்கள் சலுகை விலையில் பூச்சி மருந்துகள் விற்பனை செய்யாத இடங்களில் ஏற்படும் சலுகைத் தொகையையும், கூட்டுறவு சங்கங்கள் சலுகை விற்பனை மேற்கொண்டுள்ள இடங்களில் ஏற்படும் சலுகைத் தொகையையும் சேர்ந்ததே, மாவட்ட விவசாய அலுவலர் வரம்பிற்குட்பட்ட உச்சவரம்புத் தொகை. ஒவ்வொரு பஞ்சாயத்தும் வருடத்திற்கு ரூ. 3,000 சலுகைத் தொகை வரை உணவுப் பயிர்களுக்கு பூச்சி மருந்துகள் வழங்கலாம். இத்தொகை பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படும் மான்யங்கள் மூலம் ஈடு செய்யப்படும். ஆகவே, கூட்டுறவு சங்கங்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு, தாங்கள் உணவுப் பயிர்களுக்கு அளித்த சலுகை விவரத்தை மாதா மாதம் அனுப்பவேண்டும். இதன் நகல் மாவட்ட விவசாய அலுவலருக்கும் அனுப்பவேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் மேற்கூறப்பட்ட தொகையோடு கூட்டுறவு சங்கங்களில்லாத மருந்துகளை தங்கள் விவசாய கிடங்கு மூலம் உணவுப் பயிர்களுக்கு சலுகை விலையில் விற்ற தொகையையும் கூட்டிக்கொண்டு, தங்களது வரம்பான ரூ. 3,000 வந்தவுடன் மாவட்ட விவசாய அலுவலருக்கு தெரிவிக்கவேண்டும். இவ்விதமாக சலுகை விலையில் ஏற்படும் நஷ்டத்தை கணக்கிட்டு, தங்களது வரம்பான ரூ. 10,000 செலவானதும், இன்னும் அதிகமான தொகைக்கு அதற்கு உரிய அதிகாரமுள்ள அலுவலர்களுக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

8. மருந்தின் தரத்தை பாதுகாத்து வரும் முறையும் கணக்கு விபரங்களை விவசாய அலுவலர்களுக்கு தேவைப் பட்டபோது காண்பிப்பதன் அவசியமும்.—கூட்டுறவு சங்கங்கள், சங்கங்களின் பதிவேடுகள், விற்பனை பில்கள், சலுகை விலை சம்பந்தப்பட்ட சீட்டுகளின் கோர்வையையும் விவசாயத்துறை அலுவலர்கள் பார்வையிட அனுமதிக்க வேண்டும். மேலும் மருந்துகளின் மாதிரிகளை இலவசமாக எடுத்து சோதனைக்கு அனுப்ப மாவட்ட விவசாய அலுவலர்களையும், பயிர்ப் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் வசதி செய்து தரவேண்டும். இதனுல் விநியோகம் செய்யும் கம்பெனிகள் தரத்தில் குறைந்த மருந்துகளை அனுப்பாது பாதுகாக்க முடியும்.

9. பூச்சி, நோய்கள் திடீரென்று பெருவாரியாக தோன்றும்போது பூச்சி பூசண மருந்து விநியோக முறைகள்.—பயிர்ப் படுதுகாப்பு முறைகளை செயல்படுத்துதல் விவசாயத் துறையின் பொறுப்பேயாகும். பெரியளவில் தடுப்பு முறைகளாக கையாளும்பொழுது கூட்டுறவு சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவேண்டி பூச்சி மருந்துகளை விவசாயத்துறையே தேவையான இங்களுக்கு இலாகா வாகனங்கள் மூலம் எடுத்துச் சென்று விவசாயிகளுக்கு விநியோகிக்கவேண்டும். கூட்டுறவு சங்கங்களும் அப்பகுதிகளில் விற்பனை செய்யலாம்.

கால்நடை நோய்—முன் அறிவிப்பு.

தொண்டை அடைப்பான்:—தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மாவட்டங்களில் பிப்ரவரி 1964-ல் தோன்றக்கூடும்.

சப்பை நோய்:—கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பிப்ரவரி 1964-ல் தோன்றக்கூடும்.

அடைப்பான்:—பிப்ரவரி 1964-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தோன்றக்கூடும்.

(தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை.)

விவசாயச் செய்திக் கதிர்

திரு. எம். காசிவிஸ்வநாதன் டி. ரகோத்தமராவ்—விரிவினைப் பிரிவு, கோவை.

உழவர்கள் உழைப்பின் பயனை அடையும் அறுவடைக் காலம் அடுத்து விட்டது. விவசாயிகள் தங்கள் வயல்களிலுள்ள பயிர்களை அறுவடை செய்வதில் முனைந்திருப்பார்கள். திருந்திய முறைகளை அனுசரித்து சிறந்த முறையில் விவசாயம் செய்த விவசாயிகள் அனைவரும் நல்ல மகசூல் அடைவார்கள் என்பது உறுதி. அமோக விளைச்சல் பெற்று "பொங்கல் திருநாளை" பொலிவுடன் கொண்டாட எங்கள் நல்வாழ்த்துக்கள்.

உற்பத்தியைப் பெருக்க 'ரசாயன உரம்' அத்தியாவசியம். பயிர் உற்பத்தியைப் பெருக்குவதில் செயற்கை உரங்களான இரசாயன உரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அனைவரும் அறிந்திருந்தும், தமிழ்நாட்டில் விவசாயிகளால் உபயோகப்படுத்தப்படும் செயற்கை உரத்தின் அளவு குறைவாக இருக்கிறது. உதாரணமாக தமிழ் நாட்டில் இறைவைப் பயிர்களுக்கு சராசரி ஏக்கருக்கு சுமார் 40 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டுதான் உபயோகமாகிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மானவாரிப் பயிர்களுக்கு இடப்படும் செயற்கை உரங்களின் அளவு குறைவே.

வெளி நாடுகளிலிருந்து செயற்கை உரங்கள் இறக்குமதியாகிக்கொண்டிருக்கின்றன. உள்நாட்டிலும் உர உற்பத்தி பெருகி வருகிறது. ஆகவே செயற்கை உரங்களைப் பொறுத்தவரை உற்பத்தி அதிகமாயும் உபயோகம் குறைவாகவும் இருக்கிறது. இத்தகைய நிலையைப் போக்கி அதிகமான அளவு செயற்கை உரங்களை உபயோகிக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தவும், உர சம்பந்தமான மற்ற பிரச்னைகளை ஆராயவும் சமீபத்தில் கோவையில் ஒரு உரக் கருத்தரங்கு நடைபெற்றது.

தமிழ் நாட்டில் மூன்றும் ஐந்தாண்டு திட்ட காலத்தில் எதிர்பார்க்கும் 33⅓ சதவீதம் அதிக உணவு உற்பத்தியில் 12½ சதவீதம் செயற்கை உரங்களின் உபயோகத்தினால் அடையவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டின் குறிக்கோளான நான்கு இலட்சம் டன்களில் (அம்மோனியம் சல்பேட் ரீதியில்) இதுவரை 1·3 இலட்சம் டன்கள்தான் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே செயற்கை உரங்களின் உபயோகத்தை அதிகரித்தால்தான் எதிர்பார்க்கும் அளவு உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

செயற்கை உர உபயோகத்தை அதிகரிக்க, விவசாயிகளுக்கு சுலபமாக உரங்களைப் பெற அரசாங்கமும் சில சலுகைகளை அளித்திருக்கிறது. அரசாங்கக் கடனுதவியில் வாங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. ஒரு விவசாயிக்குத் தேவையான குறிப்பிட்ட தனி உரமோ அல்லது கலப்புரமோ கூட்டுறவு விற்பனைக் கூடத்தில் இல்லாவிட்டால் அவ்வுரத்தை எந்த உர விற்பனைக் கடையிலிருந்தும் வாங்குவதற்கு கூட்டுறவு சங்கம் கடனுதவி அளிக்கும். அதேபோல் அரசாங்க கடன் அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொண்டு விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை தனியார் கடைகளில் வாங்கவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாயிகள் பெருமனவில் செயற்கை உரங்களை வாங்கி, உபயோகித்து உற்பத்தியைப் பெருக்கலாம்.

மானாவாரிக் கம்புக்கு செயற்கை உரமிடல்.—தமிழ் நாட்டில் கரிசல் மண் பிரதேசங்களின் முக்கிய சிறு தானியப் பயிரான மானாவாரிக் கம்புக்கு செயற்கை உரங்களிடுவதன் மூலம் உற்பத்தியை பெருக்க முடியும் என்று பரிசோதனைகள் மூலம் தெரிகிறது. மூன்றுண்டுகள் நடந்த இப் பரிசோதனையில் எக்ஸ்-3 கம்புக்கு 5 டன்கள் குப்பை உரத்துக்கு மேல் ஏக்கருக்கு 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட் இடப்பட்டது. விதைப்புக்கு முன் உரம் மண்ணில் இடப்பட்டு மூடப்பட்டது. இந்தக் கம்புப் பயிர் நாட்டுக் கம்பு ரகத்தோடு (5 டன் தொழு உரம் அடி உரமாக இடப்பட்டது) ஒப்பிடப்பட்டது. மூன்றுண்டுகள் பரிசோதனைகளிலிருந்து 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட் இடுவதன் மூலம் (எக்ஸ்-3) கம்பு உற்பத்தியை சுமார் 39 சதவீதம் வரை உயர்த்த முடியும் என்று தெரிகிறது.

உங்கள் நிலத்து மண்ணை பரிசோதித்துக்கொள்ளுங்கள் ! உங்கள் உடல் நிலையை பரிசோதிப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் உங்கள் நிலத்து மண்ணைப் பரிசோதிப்பது. மண் பரிசோதனையின் மூலம் மண்ணில் பயிர்களுக்குக் கிடைக்கும் வகையில் இருக்கும் பயிர்ச் சத்துக்களின் அளவு மண்ணின் கார அமில நிலை, மண்ணிலுள்ள கரையும் உப்புக்களின் அளவு ஆகியவற்றை அறிய முடிகிறது. இவற்றை அறிந்தால்தான் அம் மண்ணிற்குத் தேவையான உரத்தைத் தேவையான அளவில் இடமுடியும். உங்கள் பண்ணையில் சில இடங்களில் மண்களராக இருக்கலாம். மண் பரிசோதனை செய்தாலன்றி அதை அறியமுடியாது. அதை அறியாவிட்டால் தக்க திருத்தல் முறைகளைக் கையாள முடியாது.

மண் மாதிரி எடுக்க உங்கள் 'கிராம சேவக்' அல்லது விவசாய விஸ்தரிப்பு அனுவலர் உதவியை நாடுங்கள். மண் பரிசோதனை செய்யும் இரசாயன நிபுணருக்கு உதவியாயிருக்க நீங்கள் அனுப்பும் மண் மாதிரியுடன் அம்மண்ணைப் பற்றிய விவரங்களடங்கிய தாளையும் (Information sheet) சேர்த்து அனுப்பவேண்டும்.

தமிழ் நாட்டில் கோவை, ஆடுதுறை (தஞ்சாவூர் மாவட்டம்), கோவில்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் இலவச மண் பரிசோதனைச் சாலைகள் இயங்கி வருகின்றன. ஆகவே விவசாயிகள் இவ்விடங்களிலுள்ள மண் சோதனை நிலைய துணை விவசாய இரசாயன நிபுணருக்கு தங்கள் நிலத்து மண் மாதிரிகளை இலவச பரிசோதனைக்கு அனுப்பலாம். மண் பரிசோதனை சம்பந்தமாக மேலும் அறிய விரும்புவோர் உங்கள் வட்டார விஸ்தரிப்பு அனுவலரை அணுகவும்.

ஆகாசத் தாமரையை அழியுங்கள்.—பாசன நீர் நிலத்திற்கு அதிகமாக உபயோகமாகும் இந் நாட்களில் நீரில் வளரும் களைகளைக் கட்டுப்படுத்துவது முக்கியமான பிரச்னையாகிவிட்டிறது. குளம் குட்டைகளிலும், பாசனக் கால்வாய்களிலும் வளர்ந்து பரவி பாசனத்துக்கு இடையூறாக விளங்கும் களைகளில் முக்கியமானது 'ஆகாசத் தாமரை' (Eichornia) இது சில சமயங்களில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பரவிவிடுகிறது. கால்வாய்களிலும் மற்ற நீர் வழிகளிலும் நீரோட்டத்துக்கு தடையாக விளங்குவதோடு இக் களை குடி தண்ணீரை அசுத்தப்படுத்துவதோடு மீன் பிடிப்பதற்கும் தடையாக விளங்குகிறது. குளம் கால்வாய்களில் ஏற்படும் வண்டலை அகற்றல் (Dredging), சங்கிலி போட்டு இழுத்தல் (Chaining), உலரவைத்தல் (Drying) ஆகிய முறைகளிருப்பினும் 2, 4-டி எனும் இரசாயனக் களைக்கொல்லி மருந்தை உபயோகிப்பதன் மூலம் இக் களையை திருப்திகரமாக அழிக்கலாம். எஸ்டர் (Ester) ரூபத்திலுள்ள மருந்து மெழுகு போன்ற படிவுள்ள நீர் வாழ்களைச் செடிகளின் பாகங்களில் நன்கு ஒட்டிக்கொள்ளும் தன்மையுடையது. 100 சதுர கெஜ பரப்பிற்கு ½ ராத்தல் மருந்து தேவைப்படும். பருத்தி இம்மருந்தால் பாதிக்கப்படுவதால் இம் மருந்தடிக்கப்பட்ட கால்வாய் அல்லது குளத்து நீரை பருத்தி வயலுக்குப் பாசனத்திற்கு உபயோகிக்கக்கூடாது. குளத்தில் நீர் குறைவாக இருக்கும் போது மருந்தடித்தால் மடிந்த செடிகளை அகற்றுவது சுலபம். மருந்தடிக்கப்பட்ட செடியை கம்போஸ்டு செய்யவோ, தீவனமாகவோ உபயோகிக்கக்கூடாது.

பருத்தி நோய்கள்.—பாக்டீரியாவினால் ஏற்படும் கருங்கிளை நோயைத் தவிர, பருத்திப் பயிர் வாடல் நோய், வேர் அழுகல் நோய் ஆகிய பூசண நோய்களால் பாதிக்கப்படுகிறது. வாடல் நோய், பெரும்பாலும் மானாவாரிப் பருத்தியை எல்லா நிலைகளிலும் தாக்குகிறது. தாக்கப்பட்ட செடிகளின் இலைகள் உலர்ந்து செடி வாடிவிடுகிறது. முடிவில் தாக்கப்பட்ட செடிகள் பட்டுப்போய்விடுகின்றன. தாக்கப்பட்ட செடிகளின் வேர்களிலும், தண்டின் அடிப்பாகத்திலும் மேல்பட்டையை உரித்தால் உட்பாகத்தில் கரிய நிற கோடு போன்ற பாகங்கள் காணப்படும். அதிகமான அளவு கரிய உரங்களையும் பொட்டாசிய உரத்தையும் இடுவதன் மூலம் இவ்வியாதியைக் குறைக்கலாம் என்று தெரிகிறது.

வேரழுகல் நோயால் பாதிக்கப்பட்ட செடிகள் திடீரென்று வாடிவிடும். வேர்கள் அழுகிப்போய் செடிகள் பிடுங்கியவுடன் எளிதில் மண்ணிலிருந்து வெளிவரும் தன்மையை அடைகின்றன. வாடிய செடிகளில் வேர்ப் பகுதி ஈரமாயும், ஒட்டிக்கொள்ளும் தன்மையுடையதாயும் இருக்கும். வேர்களின் உட்புறத்தில் வியாதி உண்டாக்கிய பூசணத்தின் கரிய நிற பாகங்கள் காணப்படும். இவ் வியாதியைக் கட்டுப்படுத்த நல்ல பலனுள்ள முறைகளில்லாவிட்டாலும் வியாதி தீவிரமாக இருந்தால் மண்ணில் செஷுட் மருந்து (Cheshut Compound) அல்லது 0·2 சதவீதம் நீரையும் சிரசான் மருந்தை இடுவதன் மூலம் வியாதியின் தீவிரத்தைக் கட்டுப்படுத்தலாம்.

தை—மாசி மாத விவசாயக் குறிப்புகள்.

நெல்.

* நஞ்சைப் பயிருக்குத் தொடர்ந்து நாற்றங்கால் தயாரியுங்கள்.
* ஏற்கனவே நட்ட பயிருக்கு முதல் முறையாக 75 ராத்தல் கால்சியம் அமோனியம் நைட்ரேட் இடுங்கள்.
* சம்பா அறுவடைக்குப்பின் பசுந்தாள் உர விதை விதையுங்கள்.
* தாளடிப் பயிரில் கலப்புக் கதிர் நீக்குங்கள்.
* சிறந்த விதையைக் கவனமாக சேகரியுங்கள்.

சிறு தானியம் பயிறு வகைகள்.

* நெல் அறுவடைக்குப் பின் உளுந்து விதையுங்கள்.
* மானாவாரி சிறு தானியங்கள் அறுவடை முடியும்.
* கோடை சோளம், கம்பு, கேழ்வரகு விதைக்க நிலம் தயாரியுங்கள்.

பருத்தி.

* பருத்திக்குத் தொடர்ந்து மருந்தடியுங்கள்.
* பஞ்சு எடுக்கும் காலம்—கவனமாக சேகரித்து சேமித்து வையுங்கள்.
* மாசிப்பட்டப் பருத்திக்கு நிலம் தயாரித்து, விதை சேகரித்து வையுங்கள்.
* சம்பா அறுவடைக்குப் பின் திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் பி. 216 எப். பருத்தி விதையுங்கள்.

எண்ணெய் வித்து

* இறவை நிலக்கடலை தொடர்ந்து விதையுங்கள்.
* விதைப்பதற்கு முன் ஊறவிடுங்கள்.
* கோடை எள் தொடர்ந்து விதையுங்கள்.
* முதிர்ந்த ஆமணக்கு சேகரம் முடிந்தபின், முத்து பிரித்தெடுங்கள்.

பழவகைகளும் காய்கறிகளும்.

* கோடைக்கால காய்கறி சாகுபடி செய்யுங்கள்.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்

இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

தபால் பெட்டி எண். 1423, சென்னை-17.

தந்தி : RAJSEED போன் : 42262

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 44425/63 தேதி 10–4–63 உத்தரவின்படி

1963-64 "ரேட் காண்ட்ராக்ட்" திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஸ்பிரேயர்கள்



'கேடார்'
அசைப்பு ஸ்ப்ரேயர்



'மாருதி'
ஃபுட் ஸ்ப்ரேயர்



'மாருத்'
கையழுத்த ஸ்ப்ரேயர்



'கேடார்–கோ.ஃ.பி'
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள்

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்-64.

தமிழ்நாடு, மைசூர் வினியோகஸ்தர்கள் :

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,
93, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு,
தபால் பெட்டி நெம்பர் 539, பெங்களூர்-2.

1963-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திய கால நிலை அறிக்கை

(சி. பாலசுப்பிரமணியன், சீ. ரங்கநாதன், விவசாயக் காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோயமுத்தூர்-3.)

இம் மாதம் முதல் தினத்தில் தமிழ்நாட்டில் இடியுடன் கூடிய கனத்த மழை ஆங்காங்கு பெய்தது. தொடர்ந்து 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி வரை சிற்சில இடங்களிலும் மீண்டும் 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11, 12 தேதிகளில் ஆங்காங்கும் மழை பெய்தது. அதன் பின்னர் 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் தேதி வரை சிற்சில இடங்களில் இலேசான மாரியும், ஆங்காங்கு சற்று கனத்த மழையும் இருந்தது. கடலூரின் அருகில் கடற்கரையோரமாக 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் தேதி மாலையில் வீசிய புயற்காற்றின் காரணமாக 21, 22 தேதிகளில் தமிழ் நாட்டில் சற்று பரவலாக மழை பெய்தது. ஆனால் 23-ம் தேதியன்று இடியுடன் கூடிய கனத்த மழை ஆங்காங்கிருந்தது. 24-ம் தேதி முதல் இம் மாதம் முடிய தமிழ்நாட்டின் சிற்சில இடங்களில் பருவ மழையிருந்தது. ஆனால் 1963-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் தேதியன்று தமிழகமெங்கும் வறட்சி நிலவியது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்.—செங்கல்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் பெய்த மழை பசுந்தாளுரச் செடிகளுக்கும், நிலக்கடலை அறுவடைக்கும் ஏற்றதாயிருந்தது. இம் மாவட்டத்தில் சம்பா நெற்பயிரில் குருத்துப்பூச்சிகள் வெகுவாகக் காணப்பட்டன. இம் மாதத்தில் வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் சற்று அதிகமாக மழை பெய்திருக்கிறது. 21, 22-ம் தேதிகளில் வீசிய புயற்காற்றினால் இப் பகுதிகளின் சில இடங்களில் சோளம், கரும்பு மற்றும் பழ மரங்கள் தலை சாய்ந்தன. இங்கு பெய்த மழை நெல் நாற்றங்கால்களுக்கும் நிலக்கடலை அறுவடைக்கும் உகந்திருந்தது. நிலக்கடலையில் இலைப்புள்ளி நோயும் (Tikka leaf spots) சிறிதளவு அசுவும் காணப்பட்டது. நெற்பயிரை குருத்துப் பூச்சிகளும், நாவாய்ப் பூச்சிகளும் தாக்கின.

தஞ்சை மாவட்டத்தில் இம்மாதம் சற்று அதிகமாக மழை இருந்தது. இம் மழையால் குறுவை நெல் அறுவடை செய்ய கடினமாயிற்று. ஆனால் நெல் நாற்றங்கால்களுக்கு பயனுள்ளதாயிருந்தது. இப் பகுதியில் நெற்பயிரை குருத்துப் பூச்சி, கற்றாளைப் பூச்சி, நாவாய்ப் பூச்சி முதலியன கடுமையாகத் தாக்கின. இம் மாதம் கடைசி வாரம் வீசிய புயற்காற்றினால் வாழை மரங்கள் மற்றும் பசுந்தாள் உரச் செடிகள் சேதமடைந்தன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சுமாரான மழை இருந்தது. இம் மழை பொதுவாக எல்லா மானாவாரிப் பயிர்களுக்கும் உதவியது இம் மழையால் சம்பா நெல் நடவுக்கும், குறுவை நெல் அறுவடைக்கும் வந்தன. தோட்டங்களில் மிளகாய் நாற்றுகள் நடவுக்கு வந்தது. இம் மாவட்டத்தில் நிலக்கடலையை சிவப்பு கம்பளிப் பூச்சிகளும், சம்பா நெற்பயிரை நாவாய்ப் பூச்சிகளும், திரிப்ஸ் (Thrips)-ம் தாக்கின. மதுரை மாவட்டத்தில் பெய்த மழை நிலக்கடலை, நவதானியங்கள், பருத்தி மற்றும் தோட்டப் பயிர்கள் பலவற்றிற்கு உகந்ததாயிருந்தது.

இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இம் மாதம் மழை போதிய அளவுள்ளதாக இல்லை. இங்கு பெய்த மழை நெல் நடவுக்கும், நிலங்கள் பண்படுத்தவும் உதவிற்று. மேலும் மானாவாரிப் பருத்தி, கம்பு, சோளம் முதலியன விதைக்கப்பட்டன. தோட்டங்களில் மிளகாய் நாற்று நடவுக்கு வந்தது. கோவில்பட்டி பகுதியில் மிளகாய் பயிரை அசுவும், திரிப்ஸ் (Thrips)-ம் பெருமளவு தாக்கின. சாத்தூர் பகுதியில் சோளம், கம்பு, துவரை முதலியன இம் மழையால் பயனுற்றன. வத்ராயிருப்பு, அருப்புக்கோட்டை பகுதிகளில் நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப் பூச்சிகள் காணப்பட்டன. விருதுநகர், கரியாப் பட்டி, நரிக்குடி பகுதிகளில் இப் பயிரில் சுருள் பூச்சி பெருமளவில காணப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் பகுதியில் மட்டும் சற்று அதிகமான மழை இருந்தது.

கோயமுத்தூர் மாவட்டத்தில் பெய்த சுமாரான மழையும், பருத்தி, மற்றும் தானியங்கள் விதைக்க உதவிற்று. பல்லடம், அன்னூர், காரமடை பகுதிகளில் நிலக்கடலை, ராகி, கரும்பு, மற்றும் காய்கறிப் பயிர்கள் அறுவடைக்கு வந்தன. ஈரோடு பகுதிகளில் பெய்த மழை நெல், கரும்பு, மஞ்சள், கடலை, சோளம், எள் முதலியவைகளுக்கு உதவிற்று. இங்கு புகையிலை நடவும், பருத்தி விதைப்பும், முதல் போகம் நெல் அறுவடையும், இரண்டாம் போகம் நெல் நடவும் இம் மழையால் நடைபெற்றன. தாராபுரம் பகுதியில் மழை போதிய அளவுள்ளதாக இல்லை.

சேலம் மாவட்டத்தில் பெய்த மழை பொதுவாக மானாவாரிப் பயிர்களுக்கும் கடலை அறுவடைக்கும், நெல் நடவுக்கும் உகந்ததாயிருந்தது. இங்கு நெற்பயிரை நாவாய்ப் பூச்சிகள் பெரிதும்தாக்கின. நீலகிரி மாவட்டத்தில் மழை குறைவு. இம் மழையும் காய்கறிப் பயிர்கள், உருளைக்கிழங்கு, தோட்டக்கால் பயிர்களுக்கு பெரிதும் உதவிற்று. உருளைக்கிழங்கில் கிழங்கு அழுகல் நோய் (Late blight) சிறிதளவு காணப்பட்டது.

இம்மாதத்திய குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு:—

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (அங்குலத்தில்).

தேதி. (1)	இடத்தின் பெயர். (2)	மழையளவு. (3)
9-10-1963	மீனம்பாக்கம் (சென்னை) ..	3·86
11-10-1963	வேலூர்	4·41
21-10-1963	ஆடுதுறை	3·67
21-10-1963	பட்டுக்கோட்டை	3·51
22-10-1963	திருப்பதிசாரம்	5·00

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர்.	ஆகஸ்டு மாத மழை யளவு	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம் ..	9·0	சரி.	சரி.
கீழ்க்கரைப் பிராந்தியம் ..	7·3	—1·9	குறைவு.
மத்தியப் பிராந்தியம் ..	4·8	—1·4	குறைவு.
தென் பிராந்தியம் ..	4·4	—5·0	மிகக்குறைவு.
மலைப் பிராந்தியம் ..	8·5	—2·7	குறைவு.

1963-ம் ஆண்டு அக்டோபர் மாதக் கால நிலை அறிக்கை மழையளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர்	இம்மாத மொத்த மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழையளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்) ..	11·0	—1·1	32·4
திரூர்க்குப்பம் *	7·2	—2·8	30·5
வேலூர்	11.7	+4·9	40·1
குடியாத்தம் *	6·0	—1·0	30·0
கீழ்க்கரைப் பிராந்தியம்.			
பாலூர் *	11·8	+2·1	36·8
திண்டிவனம் *	11·0	+1·6	48·7
கடலூர்	2·9	—8·6	26·0
நாகப்பட்டினம்	4·9	—5·7	24·4
ஆடுதுறை *	9·5	+1·5	35·1
பட்டுக்கோட்டை *	3·5	—2·1	29·6
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	9·4	+3·0	32·4
கோயம்புத்தூர் *	1·7	—4·2	10·7
கோயம்புத்தூர்	3·4	—2·9	10·6
திருச்சிராப்பள்ளி	4·8	—1·5	18·5
தென் பிராந்தியம்.			
மதுரை	4·0	—3·4	24·3
பாம்பன்	2·8	—5·7	17·3
கோவில்பட்டி *	1·3	—6·2	18·0
பாளையங்கோட்டை	0·6	—6·4	23·1
அம்பாசமுத்திரம் *	2·3	—3·9	30·0
நாகர்கோவில் *	15·8	+8·5	42·9
கன்னியாகுமரி *	4·0	—0·6	31·0
மலைப் பிராந்தியம்.			
கொடைக்கானல்	5·6	—4·7	48·7
கூனூர் *	9·6	—3·7	44·6
உதகமண்டலம் *	9·3	—1·3	40·8
நஞ்சநாடு *	9·6	—1·2	56·0

குறிப்பு.—* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

மேழிச் செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தோடு முடிவாகும் "மேழிச் செல்வம்" மாத இதழ் சந்தாதாரர்களின் சந்தா எண், மாவட்ட ரீதியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

மாவட்டம்.	சந்தா எண் ஆரம்பம்.	சந்தா எண் முடிவு.
செங்கல்பட்டு	2745	2778
தென் ஆற்காடு	4287	4360
வட ஆற்காடு	8417	8550
தஞ்சாவூர்	8959	9133
திருச்சி	6700	6822
சேலம்	4900	5064
மதுரை	2182	2211
கோயமுத்தூர்	2339	2459
இராமநாதபுரம்	1752	1825
திருநெல்வேலி	6498	6562
கன்னியாகுமரி	1229	1248
உள்ளூர் சந்தா	2072	..
	2251	2272

மேழிச் செல்வம் தொடர்ந்து பெற உடனடியாக சந்தா தொகையாகிய ரூ. 3 (மூன்று மட்டும்) அருகிலுள்ள விவசாய அலுவலகத்திலாவது அல்லது பணத்தை மணியார்டர் மூலமாக கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பியாவது புதுப்பித்துக் கொள்ளுங்கள். புதுப்பிக்கும்போது தவறாமல் சந்தா எண்ணை அதில் குறிப்பிடவும். உங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாக்குங்கள்.

வேளாண்மைத்துறை நெறியாளர்,
தபால்பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை–5.

சந்தா விவரம் :—

	ரூ.	ந.பை.
தனிப்பிரதி விலை	0	25
சித்திரை மலர்	0	50
ஆண்டு சந்தா	3	00

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் சந்தா எண்ணைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேல்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவும்.



உங்களுடைய பிரச்சினை இதுவா... அல்லது இதுவா ?



வெள்ளம் அல்லது வறட்சி,
இந்தப் பிரச்சினையை
திட்டவட்டமாக, திறமையாகத் தீர்க்க



ஜான்ஸ்டன்

வெர்டிகல் பம்புகள்

நம்பிக்கையான ஜான்ஸ்டன் வெர்டிகல் பம்புகள் வாடிக்கைக்காரர்கள் கேட்கும் அளவுப்படி தயாரிக்கப்படுகின்றன. எளிதில் மாற்றிக்கொள்ளக்கூடிய உறுப்புகளுடன் பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றன. உங்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும் ஜான்ஸ்டன் அதைத் தீர்க்கும்.

GROUP OF MACNEILL & BARRY LTD. COMPANIES

மேலும் விவரங்களுக்கு எழுதுங்கள் :
ஜான்ஸ்டன் பம்ப்ஸ் இந்தியா லிமிடெட்
2. பேர்லி பிளேஸ், கல்கத்தா-1

JOHNSTON

வெற்றிப் பாதை

(விவசாய விளம்பர நாடகம்)

[கே. எஸ். ஆலம்கீர், பி.எஸ்.ஸி. (ஏஜி.), வேளாண் கல்லூரி, கோவை.]

* கடந்த 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்த " வெற்றிப்பாதை " நாடகம் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு பி. கக்கன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டு, எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றது. இந்நாடகம் சிறந்த முறையில் நடத்தப்பெறுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த முன்னாள் வேளாண் கல்லூரி ஆராய்ச்சி நிலையத் தலைவரும் தற்போதைய வேளாண்மைத் துறை நெறியாளருமான டாக்டர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், நாடகத்தின் அமைப்பிற்கு பல்வேறு வகைகளிலும் துணைபுரிந்த முன்னாள் விரிவினை வல்லுநர் திரு ஏ. எச். எஸ். சர்மா அவர்களுக்கும் இரசாயன விரிவுரையாளர் திரு எஸ். வரதராசன் அவர்களுக்கும் குறிப்பாக ஜி· எஸ். பதி அவர்களுக்கும் ஆசிரியருடைய நன்றி பல.

காட்சி 1

பாத்திரங்கள் : லட்சுமி, ராஜி, ராமு, வேலாயுதம் முதலியோர். (லட்சுமி பூஜை செய்கிறாள், ராஜி அருகில் உட்கார்ந்திருந்திருக்கிறான்.)

ராஜி : (பூஜை முடிந்தவுடன் எழுந்து வந்து) எல்லோரும் வாங்க. பூஜை முடியப்போகுது. (வேலாயுதம், ராமு பக்தியுடன் உள்ளே வருகின்றனர்.)

லட்சுமி : ராஜி, எங்கே சொல்லு பார்க்கலாம்.

ராஜி : " உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் "

(எல்லோரும் தெய்வத்தை வணங்குகின்றனர். லட்சுமி கற்பூரம் கொடுக்கிறாள்).

வேலாயுதம் : கடவுளே இந்த வருஷமாவது கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரு. தலைக்கு மேலே கடன் நிக்குது. எனக்கு நீ கருணை செய்யாட்டாலும் என் குழந்தைகள் முகத்தையாவது பாரு. நான் பணக் காரனாகனும்னு ஆசைப்படல்லே. ஆனால் கடன் காரன்னு வாழக்கூடாதேன்னுதான் ஆசைப்படறேன். அதுக்குக் கொஞ்சம் கருணை காட்டப்பா.

ராஜி : தாத்தா, நிலம் நல்லா விளையலேன்னா கடவுள் என்ன செய்வாரு. நாம்தான் கஷ்டப்பட்டு உழைக் கணும்.

ராமு : (அதட்டலுடன்) டேய் ராஜி, சும்மா இருக்க மாட்டே. அதிகப் பிரசங்கி.

லட் : மாமா, நான் உங்க வீட்டுக்கு வந்த துரதிஷ்டம் தான் உங்க கஷ்டங்களுக்கெல்லாம் காரணம். வரைப் பிடிச்சவன் என்ன செய்வான், பானை பிடிச் சவள் பாக்கியசாலியா இருக்கணும்னு பழமொழி சொல்லுவாங்க. அது என்னைப் பொறுத்தமட்டிலே நல்ல உண்மை மாமா.

ராமு : நீங்க ரெண்டு பேரும் என் அநாவசியமா ஒருத்தர் மேலே ஒருத்தர் பழியைப் போட்டுகறீங்க. நம்ம ராஜி சொன்ன மாதிரி நாம் நல்லா பாடுபடனும், இன்னும் உழைக்கனும். ஏதோ நம்முடைய நேரங் காலம் சரியில்லாததினாலேதான் நமக்குக் கஷ்டம் வந்திருக்கு. நாம் என்ன இப்படியே கஷ்டத்திலேயா இருந்துடுவோம்! நமக்கும் நல்ல காலம் வரும்பா. சோமு இந்த வருடம்தான் காலேஜீக்குப் போயிருக் கான். அவனும் படிச்சு வந்திட்டான்னா நம்ம கஷ்ட யெல்லாம் பறந்துபோயிடும்.

ராஜி : தாத்தா......தாத்தா......சித்தப்பா கடுதாசு போட்டிருக்காரு. தபால்கார மாமா கொடுத்ததை பத்திரமா புஸ்தகத்திலே வைச்சிருக்கேன்.

ராமு : போடா போ....எடுத்துகிட்டு வாடா. (சலிப்புடன்) பத்திரமா புஸ்தகத்திலே வைச்சிருக்கானும்.

வேலா : ஏண்டா கொழந்தையை சிடுசிடுக்கிறே. போடா கண்ணு போ. (ராஜி கொண்டுவந்த கடிதத்தை ராமு திருப்பி திருப்பி பார்க்கிறான்).

வேலா : என்னடா பாக்கறே....

ராமு : எனக்கு 'அ' ஒண்ணுதான் நல்லாத் தெரியும் அது இந்தக் கடுதாசியிலே எத்தனை தடவை வருதுன்னு பாக்கிறேன்.

வேலா : குடுடா கடுதாசியை பெரிசா பாக்கவந்துட்டான். (தானும் திருப்பிப் பார்த்து) லட்சுமி....லட்சுமி....

லட் : என்ன மாமா!

வேலா : ஒண்ணுமில்லே; இந்தக் கடுதாசியைப் படி சீக்கிரம். நான் வெளியே போகணும்.

லட் : (திக்கித் திணறிப் படிக்கிறாள்) அன்புள்ள அப்பா வுக்கு, சோமு எழுதிக்கொள்வது, இப்பவும் நான் சுகமாக இருக்கிறேன். எனக்கு ஹாஸ்டலில் பணம் கட்ட வேண்டும். ஆகையால் நூறு ரூபாய் அனுப்பி வைக்கவும், நான் அடுத்த வாரம் புறப்பட்டு வரு கிறேன். (முந்தானையால் முகத்தை துடைத்துக் கொள்கிறாள்.)

ராமு : அடேயப்பா....இவ இதைப் படிக்கிறத்துக்குள்ளே ஒரு எக்கரா நிலத்தை உழுதுட்டு வந்திடலாம் போலிருக்கே!

வேலா : சும்மா இருடா....அதுகூட உன்னாலே படிக்க முடியலே, பேச வந்துட்டான். இங்கே பாரும்மா இவன் சின்னவனாயிருக்கும்போது இவனைக்கொண்டு போய் காலையிலே பள்ளிக்கூடத்திலே சேர்த்துட்டு வருவேன். மத்தியானம் பார்த்தா மந்தையிலே மாடு மேய்ச்சுகிட்டு இருப்பான். இவனும் பேச வந்துட்டான்.

ராஜி : என் தாத்தா, அப்பாவுக்கு படிக்கவே தெரியாதா ?

வேலா : ஓ....படிப்பானே அவனுக்கு இங்கிலிபீஸ்தான் வரும்....தமிழ வராது.

லட் : ராஜி, நீ போ ; உனக்காக மூக்கன் தோட்டத்திலே காத்துகிட்டு இருக்கான்.

ராமு : படிக்காததினாலே எல்லாரும் என்னை இளக்காரம் பண்றீங்க, நான்தானே இப்போ பாடுபட்டு வேலை செய்யறேன்.

வேலா : அதைப்பத்தி இப்போ என்ன ? எம்மா லட்சுமி பணத்துக்கு என்னம்மா பண்றது !

லட் : மாமா......என்னுடைய வளை சங்கிலி இருக்கு. அதை வச்சு....

வேலா : (உணர்ச்சியோடு) லட்சுமி....இன்னொரு தடவை அந்த வார்த்தையை சொல்லாதே....என் உயிருள்ள வரைக்கும் அந்த சங்கிலியைக் கழட்டக்கூடாதும்மா கழட்டக்கூடாது.

ராமு : அப்புறம் பணத்துக்கு என்னப்பா பண்றது.

வேலா : காலேஜ் வரைக்கும் போய் படிக்கறது நம் முடைய சக்திக்கு மிஞ்சின காரியம். சோமு ஒரு வருஷம் படிச்சது போதும். வந்து விவசாயத்தைக் கவனிக்கட்டும்.

லட் : மாமா, என்ன மாமா அப்படி சொல்லீட்டீங்க !

வேலா : ஆமாம்மா. துணி இருக்கிற வரைக்கும் தான்மா முழம் போடலாம். வெறும் கையை முழம் போட்டா எல்லோரும் சிரிப்பாங்க. அதனால்தான் சொல்கிறேன். எப்படியாவது இப்போ நூறு ரூபாய் கடன் வாங்கி அனுப்பிச்சுடுவோம், அவன் வந்து சேரட்டும். அப்புறம் வசதியிருந்தா அடுத்த வருஷம் அனுப்புவோம். போடா....ராமு நீ தோட்டத்துக்குப் போ.

(ராமு போகிறான்.)

தம்பி மேலே இருக்கிற பாசத்தாலே அவன் படிச்சு அறிவாளியாகணும்கர ஆசையினாலே மாடா உழைக் கரும்மா உன் புருசன். நாளைக்கு அவனுக்குத் தலைவலின்னு படுத்திட்டா நமக்கு யாரும்மா கஞ்சி ஊத்துவா. அதையெல்லாம் யோசிக்கணும்...... ஆகாசக் கோட்டை கட்டி பிரயோசனம் இல்லேம்மா ஆகவேண்டியதைப் பார்க்கணும். போம்மா நான் சொன்னபடி செய் போம்மா....

காட்சி 2

இடம் : தோட்டம்.—சுப்பண்ணன், காளிமுத்து, மூக்கன்.

சுப்பண்ணன் : (அம்மாவாசையைத் தேடிக்கொண்டு) அம்மாவாசே....அம்மாவாசே....எங்கே போயிருக் கும ! சேசே.... வரட்டும் வீட்டுக்கு. இன்னிக்கு உதைக்கிற உதையிலே தன்னாலே வழிக்கி வரணும்.

காளிமுத்து : (வந்துகொண்டே) என்ன சுப்பண்ணா.... யாரைத் தேடறே ?

சுப் : யாரு ?....காளிமுத்துவா ? வா அண்ணே. இந்த அம்மாவாசையைத் தேடித் தேடி என் காலெல்லாம் கடுத்துப்போச்சு. எங்கே போயிருக்கும்னு தெரி யல்லேயே.

காளி : (அசட்டுச் சிரிப்புடன்) என்னப்பா உளர்றே.... அம்மாவாசையா தேடிகிட்டுப் போறே......ஆமா அம்மாவாசையை நீ தேடினப்பலே வந்துடுமா.... அது அது வர்ற நாள்லேதானே வரும்......என் அவசரப்படுறே....

சுப் : என்ன அண்ணே அப்படி சொல்லிப்புட்டே ! காலையிலிருந்து அது இல்லாம எவ்வளவு கஷ்டப் படுறேன் தெரியுமா ? கீரை வாங்கி வைச்சது அப்படியே காஞ்சு போயி கிடக்குது.

காளி : நீ என்ன சொல்றே !....எந்த அம்மாவாசை யைப் பத்தி சொல்றே !

சுப் : அட !....என் ஆட்டுக்குட்டி அம்மாவாசையைப்பத்தி சொல்றேன்....ஆமா....நீ என்னங்கறே.

காளி : அது பாழாப் போச்சு போ....என் உன் ஆட்டுக்கு வேறே பேரு ஒண்ணும் கிடைக்கல்லையா ?

சுப் : அதெப்படி காளிமுத்து வேற பேரு வைக்கிறது ? அது அம்மாவாசயண்ணிக்குத்தானே பொறந்துச்சு. அதனாலே அந்தப் பேருதான் வெக்கெனும்னு வச்சேன். அதுலென்ன தப்பு இருக்கு ?

(மூக்கன் கோபத்தோடு அரிவாளை ஓங்கிக்கொண்டு வருகிறான்.)

காளி : வாடாப்பா மூக்கா !....என்ன ரொம்ப கோபமா வராப்பிலே இருக்கு....

மூக்கன் : கோபமா....அவன் மட்டும் என் கையிலே கிடைக்கட்டும்....அவனை....என்ன பண்றேன் பாரு.

சுப் : என்ன மூக்கா... யாரு மேலே உனக்கு இவ்வளவு கோபம்....

மூக் : அயோக்கியப்பய....ஆட்டைக் கொண்டாந்து நம்ம தோட்டத்திலே மேய விட்டிருக்கான்....என்ன காளி முத்து........இந்த அக்ரமத்தைப் பார்த்துகிட்டு இருக்க முடியுமா ?....அட செம்மறி ஆடுன்னாலும் பரவாயில்லே. வெள்ளாடு அண்ணே......அது

மூச்சு பட்டா பயிர் முளைக்குமா. இல்லே முளைக்கு மாங்கறேன். பேசிகிட்டே இருந்தா ஒண்ணும் நடக் காது. இன்னிக்கு ரெண்டுலே ஒண்ணு பார்துட வேண்டியதுதான். (அரிவாளைக் காட்டுகிறான்.)

சுப்பண்ணன் : மூக்கா........கொஞ்சம் பொறு அவ சரப்படாதே பொறுமையாத்தானே செய்யனும்.

மூக்கன் : நீ சும்மா இரு அண்ணே....உனக்கு ஒண்ணும் தெரியாது.

காளிமுத்து : மூக்கா......அதாவது அந்த ஆடு இருக்குல்லே ......

மூக்கன் : இருக்கா....அதை வெட்டி நம்ம கோயிலுக்கு பலி......

சுப்பண்ணன் : அடப்பாவி......என் அம்மாவாசையை வெட்டி போட்டியா (அழுகிறான்) இப்போ நான் என்ன பண்ணுவேன் !

மூக்கன் : அம்மாவாசையாவது......பௌர்ணமியாவது ....என்னப்பா இதெல்லாம்......

காளிமுத்து : மூக்கா......அந்த ஆடு இவனது...... அதுக்குப்பேருதான் அம்மாவாசை. அது இவனுக் கும் தெரியாமல் வீட்டை விட்டு இங்கே ஒடி வந்திருச்சி ! அது இவன் தப்பு இல்லே.

மூக்கன் : அப்படியா சங்கதி......

சுப்பண்ணன் : இப்போ என் அம்மாவாசை இல்லாம நான் என்ன பண்ணுவேன்...வெட்டிப்போட்டுட்டியே கொலேக்காரப்பாவி.

மூக்கன் : என்னப்பா ஒப்பாரி வைக்கிறே ! உன் ஆடு உசிரோடதான் இருக்கு......இனிமே இப்படி மேய விடாதே..... தெரியுதா......தோ.... புளியமரத் திலே கட்டியிருக்கேன்.....போய் புடிச்சிகிட்டு போ..

(சுப்பண்ணன் போகிறான். காளிமுத்து தடுத்து நிறுத்தி)

காளிமுத்து : என்ன சுப்பண்ணு....என் இந்த நோஞ் சான ஆட்டை வச்சிக்கிட்டு வீணுவுலே செலவழிச்சு கிட்டு இருக்கே. இப்போ பாரு....சீமை ஆடுகளெல் லாம் ஏராளமா கொண்டுவந்து பிளாக் டெவலெப் மெண்ட் ஆபிசிலே கொடுக்கறுங்க தெரியுமா உனக்கு ?

ப்பண்ணன் : என் அண்ணே......அது சரி நம்ப ஆடுகளுக்கு என்ன குறைச்சலுங்கிறேன்.

காளிமுத்து : சொன்னுலும் சொல்லாட்டாலும் அந்த சீமைச்செம்மறி ஆடுகளைப் பார்க்கும்போது நம்ம ஆடுகள் எல்லாவிதத்திலும் குறைச்சல்தான். இப்போபாரு நம்ம வெள்ளாட்டுலே கால்படி அதிக மாப்போனு அரைப்படி பாலுக்கு மேலே கறக்க முடியாது. தெள்ளிச்சேரி வெள்ளாடு இருக்கே அது அப்படி இல்லே. ஒரு நல்ல பசு மாட்டிலே கறக்கிற மாதிரி நிறைய பால் கறக்கும். குட்டி களும் வாட்ட சாட்டமா நல்லா இருக்கும். மேச் சேரி செம்மறியாடு வாங்குனு நிறைய ரோமமும் கிடைக்கும். அதனுலே நமக்கு நல்ல லாபமும் உண்டு.

சுப்பண்ணன் : சரி....காளிமுத்து அண்ணே....நீங்க சொல்றது சரிதான். அந்த ஆடுகளுக்கு எங்கே போறது ? யாருகிட்டே போயி வாங்கிறது. ஒரு விவரமும் புரியல்லியே ?

காளிமுத்து : நீ எங்கேயும் போகவேண்டாம்....நோ போயி நம்ம பி.டி.ஒ.வைப் பார். அவரு எல்லா உதவியும் செய்வாரு....அப்படி நாலு தெள்ளிச் சேரி வெள்ளாடும் மேச்சேரி செம்மறி ஆடும் வாங் கிட்டா நாலு காசைப் பார்க்கலாம். அதைவுட்டுட்டு அம்மாவாசையும், பௌர்ணமியையும் கட்டி அழுது கிட்டு இருக்கியே......நல்லா இருக்கா.

மூக்கன் : நல்லா கேட்டுகிட்டேஇல்லே போயி உடனே அம்மாவாசைய வித்துவிட்டு மேச்சேறி செம்மறி ஆடா பார்த்து வாங்கு....போ.

சுப்பண்ணன் : சரி அண்ணே அப்போ வர்ரேன். . .

மூக்கன் : ம்....இனிமே உன் ஆடு தோட்டத்திலே வந்ததுன்னு காலே வெட்டி சூப்பு வச்சிப்புடுவேன்.. ஜாக்கிரதையாக பார்த்துக்க....போ.

(சுப்பண்ணன் போகிறான்.)

காளிமுத்து : மூக்கா என்னதான் சொல்லு வெள்ளாடு வளக்கிறது எனக்கு அடியோட புடிக்கல்லே.

மூக்கன் : ஏண்ணே ?

காளிமுத்து : என்னடா மூக்கா....இதுகூடவா உனக்குத் தெரியல்லே வெள்ளாடு திங்காத பயிர்ப்பச்சை உண்டா ? நீயே சொல்லு இல்லே வெள்ளாடு கடிச்சு விருத்தியான மரம்தான் உண்டா ?

மூக்கன் : ஆமாண்ணே மரம் நடு விழா மரம் நடு விழான்னு சொல்லி வருஷா வருஷம் மரங்களை கொண்டாந்து நம்ப ஊர்லே நட்ருேம். அத்தனை யும் இந்த வெள்ளாடு கடிச்சு பாழாப்போச்சு.

காளிமுத்து : அதனுலேதான் சொல்றேன். நம்ப ஊர்லே கண்ணுக்கு குளிர்ச்சியா நாலு மரங்களைப் பார்க்கணும்னு, அதனுலே மழைபெஞ்சு நாம நல்லா வாழனும்னு இந்த வெள்ளாட்டை யெல்லாம் ஒழிச் சுக்கட்டனும். என்ன சொல்றே.

மூக்கன் ; சொல்றது என்ன அப்படியே செஞ்சிட வேண்டியதுதான்.

காளிமுத்து : மூக்கா உங்கிட்டே ஒரு முக்கியமான விஷ யம் கேக்கணும்னு நெனச்சேன். இப்பத்தான் ரோசனை வந்துச்சு. உங்க மாமா வேலாயுதம்புள்ளே நெலத்தை விக்கப்போனுராமே. நெசந்தானு ?

மூக்கன் : ஆமாண்ணே அப்படித்தான் சொல்லிகிட்டு இருந்தாரு.

காளிமுத்து : ஏன் ?

மூக்கன்! என்ன செய்யறது கடன் தொல்லே சாஸ்தியாப் போச்சு. சின்ன பையனே வேற காலேஜிலே கொண்டு போயி சேத்தாரு. அவன் காசை கறக்கருன்... அதனுலேதான். ....

காளிமுத்து : ஒகோ அப்படியா விஷயம். அப்போ விக்கிறது நிச்சயம்.

மூக்கன் : ஆமாண்ணே. ஒரே பிடிவாதமா இருக்காரு.

காளிமுத்து : நான் எதுக்கு கேட்டேனு நல்ல நிலம். அதை நாமே வாங்கிடலாம்னுதான்....ஏதோ 5, 10 கூடுது குறையுது நமக்குள்ளே சரிபண்ணிக்கலாம் இல்லேயா.

மூக்கன் : ஆமாம்....ஆமாம் நீங்க யோசனே பண்ணி பணத்தைத் தயாரா வச்சுக்குங்க நான் பாத்து ஒங்களுக்கு அப்போ அப்போ தகவல் கொடுக்கறேன்.

காளிமுத்து : ரொம்ப சந்தோஷம்....காப்பிக்கு சொல்லி யனுப்பட்டுமா ?

மூக்கன் : அதெல்லாம் வேண்டாம். எனக்குத் தெரியாம ஒண்ணும் முடிவு செஞ்சிடாதீங்க.

காளிமுத்து : என்ன மூக்கா நீ சொல்றது ஒண்ணும் புரியலியே.

மூக்கன் : நிலத்தை உங்களுக்கு சீக்கிரம் வித்துவிடலாம் நீங்க நமக்கு வேண்டியவங்க. அதிலே ஒண்ணுமில்லே. ஆனுல் மாமா நிலத்திலே கொஞ்சம் தகராறு இருக்கு. அப்புறம் நாளேக்கு "எண்டா மூக்கா தெரிஞ்சும் சும்மா இருந்துட்டியே" அப்படீன்னு சொல்லக்கூடாது பாருங்க; அதனுலேதான் சொன்னேன்.

காளிமுத்து : அது வேறே சிக்கலா ? அப்போ வுட்டுட வேண்டியதுதான்.

மூக்கன் : இது உங்களோட இருக்கட்டும்.

காளிமுத்து : சரி அப்போ நான் வரேன் (போகிருன்)

மூக்கன் : சிக்கலுன்னு சொன்ன உடனே அசந்துட்டானே மாமா நிலத்தை விக்க விடுவேனு சரியான பிளான் போடறேன்.

போகிருன்)

(தொடரும்)

WATER DIVINER

28வரு அனுபவமுள்ள தண்ணீர் ஊற்று கண்டுபிடிக்கும் நிபுணர்

மேன்மை தங்கிய சென்னே கவர்னர், திருவாங்கூர் மஹாராஜா, தென் பிராந்திய மிலிடரி தளபதி, P.W.D., C.P.W.D., முற்போக்குள்ள தொழிலதிபர்கள், விவசாயிகள் மற்றும் பலராலும் ஆதரிக்கப்பட்டவர். கிணறுகள் வெட்ட ஊற்றுள்ளதும், பாறையற்றதுமான இடம் கண்டுபிடித்துக் கொடுக்கப்படும். பழைய கிணறுகள் அடி வெட்டு வெட்டினுல் அல்லது போரிங் போட்டால் பிரயோஜனப்படுமா, படாதா என்றும் ஆலோசனே கூறப்படும்.

தயவு செய்து விசாரிக்கவும் :

N. சாம்பசிவன்,
வாட்டர் டிவைனர்,
"ஸ்ரீரமண வில்லா",
41, கச்சேரி ரோட்,
மைலாப்பூர் :: மதருஸ்-4.
[டெலிபோன் : 73762]

நற்சாட்சிப் பத்திரங்கள் :

"அரியமலம் வட்டாரத்திலுள்ள கீழபனேயூர் கிராமத்தில் நீங்கள் எனக்கு குழாய் கிணறுபோட குறித்து கொடுத்த இடத்தில் போரிங் போட்டு விட்டேன். இதில் 4 அங்குல பம்புக்கு 24 மணி நேரமும் தண்ணீர் கிடைத்துக்கொண்டிருக்கிறது. மிகவும் வரட்சியான இந்த பிரதேசத்தில் இவ்வளவு தண்ணீர் கிடைத்தது உங்கள் திறமையால்தான் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒ-ம்) N.K.L. குளந்தைவேலன் செட்டியார்,
(K) லக்ஷுமீபுரம் (Via) கானுகோத்தான்"

"நீங்கள் குறித்துக் கொடுத்த இடத்தில் கிணறு வெட்டினேன். நீங்கள் கூறியபடி பாறையற்ற இடமாகவும் வேலே செய்வதற்கு வசதியாகவும் இருந்தது 25 அடியில் இரண்டு கமலேகளுக்கு போதுமான தண்ணீர் வந்துவிட்டது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒ-ம்) P. சென்னப்ப ரெட்டியார்,
நவநீதகிருஷ்ணபுரம், மேலகலங்கல் P.O.
(தென்காசி Tk.) (திருநெல்வேலி Dt.)"

ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்

1964-ம் வருடம் ஜனவரி மாதத்திய கிராம நிகழ்ச்சிகளின் விவரம்.

புதன் (1—1—64)

திருவாசகம்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கீரை உணவு.
படப்பாட்டுகள்.
உல்லாசப் பயணம்—சித்திரம்.

வியாழன் (2—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
நமது திட்டம்—தேசீய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் (I.C.A.R.) சரித்திரம்.
செய்தி விளக்கம்.

வெள்ளி (3—1—64)

தேசப்பக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி பதில்.
2. கிராமத்தில் தொழில்படை.

சனி (4—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
நம் மாதர் மன்றம்—
1. சிறுதுளி.
2. சத்ய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (5—1—64)

கிராமச் சிறுவர்கள்.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராமம் போவோமே—செய்தி சித்திரம்.

திங்கள் (6—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
தேவாரம்.
விஞ்ஞான கூடம்—வர்ணங்கள் தோன்றுவதெப்படி ?
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
உழைப்பளித்த உயர்வு—நாடகம் (எம். பி. மொஹய தீன் எழுதியது).

செவ்வாய் (7—1—64)

தேசப்பக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி பதில்.
2. சம்பா அறுவடையும், தானிய சேமிப்பும்.

புதன் (8—1—64)

பாசுரம்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
நம் பற்கள் பாதுகாப்பு.
படப்பாட்டுகள்.
மீனுட்சி கல்யாணம்—நாடகம்.

வியாழன் (9—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருக்குறள் விளக்கம்.
திருப்புகழ்.
நமது திட்டம்—நம் உள் நாட்டு நீர்ப் போக்கு வரத்து.
செய்தி விளக்கம்.

வெள்ளி (10—1—64)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி பதில்.
2. பண்ணையாள் கூட்டுறவுப் பண்ணை திட்டம்.

சனி (11—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
நம் மாதர் மன்றம்—
1. எங்கள் கிராமத்தில்.
2. சத்ய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (12—1—64)

கிராமச் சிறுவர்கள்.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
நம் நாட்டு விவசாயி—கடிதம்—கரும்புத் தழையிலிருந்து கம்போஸ்டு உரம்.
கிராமியக்கலை—கதைப்பாட்டு.

திங்கள் (13—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருப்புகழ்.
கால்நடைகளின் சாதாரண நோய்கள்—மடிவீக்கம்.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
மாடிவீட்டு மாப்பிள்ளை-கல்யாணம்—தொடர் சித்திரம் (எழுதியவர் : என். ஆர்.)

செவ்வாய் (14—1—64)

பொங்கப் படி—சித்திரம் (எழுதியவர் : என். ஆர்.)
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி பதில்.
2. கால்நடைகளைத் தாக்கும் கால்நோய்-வாய் நோய்.

புதன் (15—1—64)

திருப்புகழ்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
குறைந்த செலவில் கட்டக்கூடிய ஒதுங்குமிடம்.
படப்பாட்டுக்கள்.
வீட்டுக்கு லக்ஷ்மி—சித்திரம் (எழுதியவர் : என்.ஆர்.)

வியாழன் (16—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருப்புகழ்.
திருக்குறள் விளக்கம்.
நமது திட்டம்—விவசாய முன்னேற்றம்.
செய்தி விளக்கம்.

வெள்ளி (17—1—64)

தேசப்பக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி பதில்.
2. நமது ஜவான்களின் நலனுக்காக.

சனி (18—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
நம் மாதர் மன்றம்—
1. ஆப்பக்கார அங்காயி—தொடர் சித்திரம்.
2. சத்ய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (19—1—64)

கிராமச் சிறுவர்கள்.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம முன்னேற்றம்—கிராமச்சாவடியில் ஜல்லிக்கட்டு விசாரணை வழக்கு—(எழுதியவர் : தனஞ்செயன்)

திங்கள் (20—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
சித்தர் பாட்டுகள்.
விஞ்ஞானக்கூடம்—வெளிச்சத்தின் விசித்திரம்.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
சந்திரனே சாட்சி—நாடகம்.

செவ்வாய் (21—1—64)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்.
1. கேள்வி பதில்.
2. பழ சாகுபடி திட்டம்.

புதன் (22—1—64)

சித்தர் பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
ஈக்களை ஒழிப்பது எப்படி ?
படப்பாட்டுகள்.
வசியப்பொடி—நாடகம்.

வியாழன் (23—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருப்புகழ்.
திருக்குறள் விளக்கம்.
நமது திட்டம்—அலுமினியம் உற்பத்தி.
செய்தி விளக்கம்.

வெள்ளி (24—1—64)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி பதில்.
2. தேனீ வளர்த்தல்.

சனி (25—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
படப்பாட்டுகள்.
நம் மாதர் மன்றம்—
1. சிறு தொழில்.
2. சத்ய நெறி.
3. நாட்டுப்பாடல் பயிற்சி.

ஞாயிறு (26—1—64)

கிராமச் சிறுவர்கள்.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கூட்டுப்பண்ணை.
நாட்டுப் பாடல்கள்.
மக்கள் ஆட்சி—குடியரசு தினம் பற்றிய சித்திரம்.

திங்கள் (27—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
அருட்பா.
கால்நடைகளின் சில சாதாரண நோய்கள்—கொம்பு முறிதல்.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
வளரும் தமிழகம்.

செவ்வாய் (28—1—64)

தேசபக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி பதில்.
2. நரம்புச் சிலந்தி நோய்.

புதன் (29—1—64)

தேவாரம்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
செய்தித்தாள்.
படப்பாட்டுகள்.
கோண எழுத்துக் குஞ்சிதபாதம்—தொடர் சித்திரம்.

வியாழன் (30—1—64)

மெல்லிசை.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
திருப்புகழ்.
அமரன்—சர்வோதய சித்திரம்.
நமது சாதனை.
செய்தி விளக்கம்.

வெள்ளி (31—1—64)

தேசப்பக்திப்பாடல்.
ஊர்ச்சாவடி.
அறிவிப்புகள்.
மெல்லிசை.
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வி பதில்.
2. கட்டாயக் கல்வித்திட்டம்.

உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு ஓர் எச்சரிக்கை!

மேற்கு வங்காள மாகாணத்தில் "டார்ஜிலிங்" மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிரிடும் முக்கிய இடங்களில் "உருளைக்கிழங்கு வார்ட் நோய்" பெருவாரியாக காணப்படுகிறது. இந் நோய் மற்ற இடங்களுக்கும் பரவக் கூடும். இதற்கு தகுந்த தடுப்பு முறை எதும் இல்லை. இந் நோய் தாக்காத ரகங்களைப் பயிரிடுவதுதான் சிறந்தது. சிவப்பு உருண்டை (Red Round) ரகம் கடுமையாகத் தாக்கப்படுகிறது. வெள்ளை உருண்டை (White Round-Sarkali Alu), காலா ஆலூ (Kala Alu) ரகங்களிலும் காணப்படுகிறது.

இந் நோய் மற்ற இடங்களுக்கு பரவாதிருக்க கீழ்கண்ட எச்சரிக்கைகளை விவசாயிகளும், வியாபாரிகளும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. டார்ஜிலிங் மாவட்டத்தில் வார்ட் நோய் தாக்கிய பகுதிகளிலிருந்து அரசாங்கம் நேரடியாகவோ அல்லது விதை வியாபாரிகளிடமிருந்தோ உருளைக்கிழங்கு விதை தருவிக்கக்கூடாது.

2. விவசாய விஸ்தரிப்பில் சம்பந்தப்பட்ட அனுவலர்கள் விவசாயிகளுக்கு இந் நோய் இருப்பதை எடுத்துக்கூறி டார்ஜிலிங் பகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட விதைகளை வாங்கக்கூடாது என்று பிரசாரம் செய்ய வேண்டும்.

3. குளிர் சாதனங்கள் பொருந்திய சேமிப்பு கிடங்களும் டார்ஜிலிங்கிலிருந்து உற்பத்தியான விதைக் கிழங்குகளை வாங்கி சேமிக்கக்கூடாது.

4. உருளைக்கிழங்கு விதை வியாபாரிகள் டார்ஜிலிங்கிலிருந்து விதைகள் வாங்கக்கூடாது.

5. விவசாயிகளிடையே நல்ல பிரசாரம் செய்வதால், விவசாயிகளும் டார்ஜிலிங்கிலிருந்து விதை இறக்குமதி செய்யும் வியாபாரிகளிடமிருந்து விதை வாங்கத் தயங்குவார்கள். டார்ஜிலிங் பகுதிகளிலும் தங்கள் கிழங்குகளுக்கு விதை மார்க்கட் இல்லையென்று தெரிந்தால் நோய் தாக்காத ரகங்களைப் பயிரிட முன்வருவார்கள்.

டார்ஜிலிங் மாவட்டத்திலிருந்து "வார்ட் நோய்" தாக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வரும் விதையை உபயோகிக்காதீர்கள்.

தந்தையைப்போல் தனயன்...

ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான வேற்றிலோ? ஊஹூம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம்மார்க்" உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.



RALLIS TREE BRAND FERTILIZERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

காந்தி கிராமத்தில்
நடைபெற்ற விவசாய
பொருட்காட்சிக்கு பிர
தமர் நேருவை முத
லமைச்சர் திரு
எம். பக்தவத்சலம்,
உள்துறை விவசாய
அமைச்சர் திரு
பி. கக்கன் முதலி
யோர் வரவேற்றல்.



தமிழ்நாடு விவசாய திட்
டங்களின் முன்னேற்
றத்தைப்பற்றியபுள்ளி
விவரங்களை பிரதமர்
நேரு கவனிக்கிறார்.
விவசாயச் செய்தி
அலுவலர் திரு
எம். ஜே. டேவிட்
விளக்கிக் கூறுகிறார்.



கண்காட்சியைத் துவக்கி
வைத்த திரு
யூ. என். தேபர் மண்
வளப் பாதுகாப்பு
திட்டங்களைப் பற்றிய
காட்சிகளை பார்வை
யிடல்.

Regsitered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1964

திருந்திய விவசாயக் கருவிகளை பிரதமர் பார்வையிடுதல்.
பொறியியல் ஆராய்சி நிபுணர்
திரு எஸ். இ. அனந்தராமன் விளக்கிக் கூறுகிறார்.

"சாந்தி சேனை" அணிவகுப்பில் பிரதமர்.

69671
JL
J.211m.N63
N63.20

நெய்யில் கலப்படத்தை யொழிக்க தமிழ்நாடு அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் முறைகளைப் பிரதமர் பார்வையிடுதல்.



தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.